Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 புரட்டாதி 05 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷஃபான் 05 (21.09.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:356

புதுப்பொலிவுடன் யாழ்ப்பாணத்தில்

FedEx. Express

விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும் விரைவாக பொதிகள், கடிதங்களை அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

THIRUMURUGAN COM NET

Opposite Diolag phone shop
259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835
Fax:021 222 7836

பலநோக்கு கூ.ச. முன்பாக
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 7560
Fax:021 222 7310

E.mail:thirumurugan5@lycosmail.com

## விபத்துக்களில் சிக்கி இரு பெண்கள் பலி!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இடம்பெற்ற இருவேறு விபத்துக்களில் சிக்கி இரு வயோதிபப் பெண்கள் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 13 ஆம் திகதி நல்லூர் தேர்த்திருவிழாவிற்குச் சென்றுவிட்டு, வீடு திரும்பிய சமயம், அரியாலையைச் சேர்ந்த கோவிந்தசாமி செல்லம்மா (வயது 70), மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்தார்.

அவரை வைத்தியசாலையில் அனுமதித்த மோட்டார் சைக்கிளில் பயணித்தோர். தலை மறைவாகியிருந்தனர்.எனினும் விபத்துக்குள்ளான வயோதிபப் பெண் நேற்றுமுன்தினம் வைத்தியசாலையில் உயிரிழந்ததை அடுத்து மோட்டார் சைக்கிளால் மோதியவர்களைக் (12 ஆம் பக்கம் பார்க்க)

## உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களை ஒருபோதும் நியாயப்படுத்திவிட முடியாது!

### மனித உரிமைக் கருத்தரங்கில் கலாநிதி சண்முகலிங்கன்

(யாழ்ப்பாணம்)

உயர்பாதுகாப்பு வலயம் என்பது சட்டபூர்வமற்றதொன்று - அதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது. அப்படியான நிலையில், உயர் பாதுகாப்பு வலயத்தை நியாயப்படுத்த முடியாது. தேசிய பாதுகாப்புக்காக மக்கள் வீடுகளில் இராணுவத்தினர் வசிப்பதாகக் கூறுவது நியாயமற்றது என யாழ். பல்கலைக்கழக சமூகவியல்துறை தலைவர் கலாநிதி என். சண்முகலிங்கன் தெரிவித்தார்

யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற இலங்கையிலுள்ள இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான கொள்கைகளையும் சட்டங்களையும் மீள்பரிசீலனை செய்தல் தொடர்பான மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் விசேட கூட்டத்தில் கலந்து (12 ஆம் பக்கம் பார்க்க)



# கூட்டணிக் குழப்பங்களைத் தீர்த்து பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்!

## அரசாங்கத்திடம் கனடா வலியுறுத்து

(கொழும்பு)




**தமிழீழ விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை மீளவும் விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பிக்க வேண்டும் என்றும்**

**ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் கூட்டுக் கட்சிகளுக்கிடையில் ஒருமித்த கருத்துக்கு வரவேண்டும் என்றும் கனேடிய அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.**

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்றுக்காலை இலங்கைக்கான கனேடியத் தூதுவர் வலறி றேமன் அம்மையாரைச் சந்தித்திருந்தார்.

இந்தச் சந்திப்புக் குறித்து கொழும்பிலுள்ள கனேடியத் தூதரகம் நேற்று மாலை வெளியிட்ட அறிக்கையிலேயே சமாதான முயற்சிகளை இலங்கை அரசாங்கம் விரைவாக மீள ஆரம்பிக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் புலிகளுடனான பேச்சுக்களை விரைவாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியதும், கூட்டணிக் கட்சிகளிடையே ஒருமித்த கருத்தை உருவாக்கவேண்டியதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும். (12 ஆம் பக்கம் பார்க்க)

இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம்:

## அடுத்த மாதம் இறுதி முடிவு!

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பான இறுதி முடிவு அடுத்த மாதம் எடுக்கப்படவுள்ளதாக அரசாங்கத்தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

இலங்கையின் பாதுகாப்பு அதிகாரிகளை மேற்கோள்காட்டி வெளியிடப்பட்ட இந்தத் தகவலில் -

இருநாட்டு பாதுகாப்பு ஒப்பந்தத்தில் - இராணுவப் புலனாய்வுத்துறை ஒத்துழைப்பு, இருநாட்டு (12 ஆம் பக்கம் பார்க்க)

இந்தச் சந்திப்புக் குறித்து கொழும்பிலுள்ள கனேடியத் தூதரகம் நேற்று மாலை வெளி

நான் ஆத்ம ரீதியாக உணர்கி றேன். இன்றில்லாவிட்டாலும் என்றோ ஒரு நாள் எமது மக் கள் நிச்சயமாக விடுதலை அடைவார்கள். - தியாகி திலீபன்



# அபிலாஷைகளை தீர்க்கும் நோக்குடனேயே சமாதானப் பேச்சுக்கள் அமையவேண்டும்!

## அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்!



(கிளிநொச்சி)

விரைவில் சமாதானப்பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்படவேண்டும் என்று குறித்தும் தமிழ் மக்களின் அபிலாசைகளின் அடிப் படையில் பிரச்சினைகளை தீர்க்கும் நோக்கு டன் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படவேண்டும் என்பது குறித்தும் புலிகளின் தலைமைப்பீடம் மிகவும் உறுதியாகவும் தெளிவாகவும் இருக் கிறது என அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

கனேடியத்தூதுவர் வலறி ரேமனுடன் சந்தித்துப்பேசிய பின்னர் செய்தியாளர் களிடம் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் வலறி ரேமனுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப் பாளர் (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜே.வி.பியினர் மீது ரணில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப் பதற்காக அரசாங்கம் ஏனைய கட்சிகளிடம் ஆதரவு கோரியுள்ள நிலையில் - அரசாங் கத்துடன் இணைந்துள்ள ஜே.வி.பி ஏனைய கட்சிகளுக்கு சேறு பூசும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றக் குழு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியின் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொண்டுள்ள ஜே.வி.பியே சமாதான நடவடிக் கைகளுக்கான முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளவேண்டும். (12 ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

# புலிகளின் சோதனைச் சாவடிக்கு விரைவில் 24 மணிநேர மின்சாரம்

## பதில் பொது முகாமையாளர் என்.கமலநாதன்

ஓமந்தையிலுள்ள விடுதலைப் புலிகளின் சோதனைச்சாவடிக்கு விரைவில் 24 மணிநேர மின்சாரம் வழங்கப்படவுள்ளதாக வடமாகாண மின்சாரசபைப் பதிற்பொதுமுகாமையாளர் எஸ்.கமலநாதன் தெரிவித்தார்.

ஓமந்தையிலுள்ள இராணுவத்தினரின் சோதனைச்சாவடிகக்கு ஏற்கனவே மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. புலிகளின் சோதனைச்சாவடி அமைந்துள்ள பகுதியில் மிதிவெடிகள் பூரணமாக அகற்றப்படாமையால் மின் இணைப்பு வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

தற்போது மிதிவெடிகள் பூரணமாக அகற்றப்பட்டுள்ள நிலையில் புலிகளின் சோதனைச் சாவடிக்கு மின்சாரம் வழங்குவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் பகுதிக்கு மின்சாரம் வழங்க 13 மில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. தொடர்ந்து புளியங்குளம், மாங்குளம் போன்ற பகுதிகளில் உள்ள பொது மக்களுக்கும் 24 மணி நேர மின்சாரம் வழங்கப்பட இருக்கிறது.

இந்தத் திட்டத்திற்கு 55 மில்லியன் ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, ஐரோப்பிய யூனியன் ஆகியவற்றின் உதவியுடன் மிக விரைவில் இப்பணி பூர்த்தி செய்யப்படும் என தெரிவித்தனர்.

# கஷ்டப் பிரதேச ஆசிரியர்களுக்கு ஜனவரி முதல் அதிகரித்த கொடுப்பனவு

கஷ்டப் பிரதேசங்களில் கடமை புரியும் ஆசிரியர்களுக்கான அதிகரித்த கொடுப்பனவு எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வழங்கப்படவுள்ளது.

இதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளது. இதற்கென 56 கோடிரூபா நிதியினைத் திறைசேரி ஒதுக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் பிரகாரம் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் அதிகஷ்டப் பிரதேசத்தில் கடமைபுரியும் ஆசிரியர்களுக்கு 2500 ரூபாவும், கஷ்டப் பிரதேசத்தில் கடமை புரியும் ஆசிரியர்களுக்கு 1500 ரூபாவும் மேலதிகக் கொடுப்பனவுகளாக வழங்கப்படவுள்ளன.

இதனையடுத்து கஷ்டப்பிரதேசத்தில் கடமைபுரியும் ஆசிரியர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் 10 வீத, 15வீத கொடுப்பனவும் நிறுத்தப்படும் என்றும் கூறப்படுகிறது.

கஷ்டப் பிரதேசங்களில் கடமை புரியும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் நோக்குடனே ஜனாதிபதியால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (17,122)

# பிரதான உற்சவ தினங்களில் மண் விநியோகம் இடைநிறுத்தம்

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான உற்சவத்தின் பிரதான திருவிழாக் காலத்தில் மணல் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதாக வடமராட்சி கிழக்கு புனரமைப்புக் குழு தெரிவித்துள்ளது.

வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான பிரதான திருவிழாக் காலங்களான எதிர்வரும் 27 ஆம் திகதி தேர்த்திருவிழா, 28 ஆம் திகதி சமுத்திரத் தீர்த்தம், 29 ஆம் திகதி கேணித் தீர்த்தம் ஆகியன நடைபெறவுள்ளன. இத் தினங்களில் போக்குவரத்து நெரிசலைத் தடுக்கும் நோக்குடன் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (14)

# கனகரத்தினம் மகா வித்தியாலய பவளவிழா நடைபவனி இன்று

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் பவளவிழா நடைபவனி இன்று காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன்போது வித்தியாலய ஸ்தாபகர் அமரர் கனகரத்தினத்தின் உருவச்சிலை எடுத்துச்செல்லப்படவுள்ளது. இந்த நடைபவனி ஸ்ரான்லிக் கல்லூரி வீதி, யாழ்.கண்டி வீதி, கனகரத்தினம் வீதி, மாம்பழம் சந்தி, யாழ். கண்டி வீதி, சின்னக்கிணற்றடிவீதி, நாவலர் வீதியூடாகப் பாடசாலையை வந்தடையும்.

பாடசாலையின் பெருமை எடுத்துக்காட்டும் வகையில் இடம்பெறவுள்ள நடைபவனியைத் தொடர்ந்து கல்லூரி மன்றங்களின் காட்சி நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

## நல்லூர் உற்சவ காலத்தில்

# தவறவிடப்பட்ட அடையாள அட்டைகள் மாநகர சபை இந்து விடுதியில் ஒப்படைப்பு!

நல்லூர் உற்சவ காலத்தில் தவறவிடப்பட்ட பின்வரும் பெயர் முகவரி உடைய தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன யாழ்.மாநகர சபை இந்து விடுதியில் இயங்கும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்களை நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபை மருத்துவ அதிகாரி எம்.மரியதாஸ் தெரிவித்தார்.

தேசிய அடையாள அட்டை - ஜீவரட்ணம் பிறேம்குமார் (மின்சார நிலைய வீதி), மல்லிகாதேவி வரதராசா, காசிலிங்கம் சசிகலா (வி. எச்.லேன் கோப்பாய்), ஜெகதீசன் செல்வமலர் (உடுப்பிட்டி), தவராணி விஜயதாசன் (புங்குடுதீவு), ராஜரட்ணம் உதயரஞ்சினி (கோண்டாவில் வடக்கு), ஜானகி சண்முகரட்ணம் (தெஹிவளை), கு.அணிஸ்மாறன் (விபுலானந்த வீதி), கந்தசாமி கிருபா (ஏழாலை).

விசேட அடையாள அட்டை - ராஜரட்ணம் உதயரஞ்சினி (கோண்டாவில் வடக்கு), தவராணி விஜயதாசன் (புங்குடுதீவு), சுதாகரன் கலைச்செல்வி (மணல்தறை லேன்), புஸ்பராணி குணசிங்கம் (பலாலி கிழக்கு), மல்லிகாதேவி வரதராசா, தங்கம்மா விஸ்வலிங்கம் (நுணாவில்), கிருபா நடேஸ்வரன் (ஏழாலை) ஆகியோரது அடையாள அட்டைகளே கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மீண்டும் சாவகச்சேரியில்...!!

லக்ஷறி பல் மூக்குக் கண்ணாடி அகம்

- சிறந்த சாங்குப் பற்களை சீரான முறையில் முக அமைப்புக்கு ஏற்ற முறையில் கட்டிட
- மிதப்புப் பற்களுக்கு சிறந்த முறையில் கிளிப் போட்டு மிக விரைவில் சீரமைத்திட
- இலவச கண்பரிசோதனை செய்து மூக்குக் கண்ணாடிகள், சண் கிளாஸ் வகைகளை பெற்றுக்கொள்ள
- வேறு எங்காவது பல்கட்டி, கிளிப்போட்டு திருப்தியடையாதவர்கள் தொடர்பு கொள்ளவும்
- பாடசாலை மாணவர்களுக்கு கிளிப் பொருத்த விசேட சலுகை உண்டு

லக்ஷறி பல் மூக்குக் கண்ணாடி அகம்
(வேம்படிச் சந்திக்கு அண்மையில்) T.P: 0777-222534
இல. 18, கச்சாய் வீதி, சாவகச்சேரி.
(3172)










# மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு

# வடக்கு கிழக்கு மாகாண சபை!

## போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (கார்ப்)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
“ஆஅவ” கடன் இல. 2043 - SRI (SF)

# கேள்வி அறிவித்தல் இல.32

# குடிசார் வேலைகளைப் பெறுதல்

1. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டத்தின் (கார்ப்) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன் கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னகத்து தொழில் தருநராக குறிப்பிடப்படும் ஆளுநரால் நியமிக்கப்பட்ட கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் ஒப்பந்தத்திற்கு தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த (ICTAD) பதிவு | கேள்வி பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | MU/CAARP/HS/04 | முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை நிர்மாணம். வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு தொகுதி - 1 | M3 | 1,000,000/= |

3. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு தரப்படுத்தலின் கீழ் M3 (கட்டடங்கள்) அல்லது அதற்கு மேலான தரத்தில் தம்மை உள்ளூர் ஒப்பந்தகாரர்களாக பதிவுசெய்துகொண்ட எல்லா கம்பனிகளுக்கும் இலங்கை தேசிய ஒப்பந்தகாரர் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கும் (NCASL) அல்லது ஆசிய அபிவிருத்தி வங்கியின் அங்கத்துவ நாடொன்றைச் சார்ந்த வெளிநாட்டு ஒப்பந்தகாரர்களுக்கும் கேள்விகள் திறந்துள்ளது.

4. தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் கேள்வி சம்பந்தமான மேலதிக தகவல்களை திட்டப் பணிப்பாளர், 140 மின்சார நிலைய வீதி, திருகோணமலை என்னும் முகவரியில் பெற்றுக்கொள்வதோடு கேள்வி ஆவணங்களையும் பரிசீலனை செய்யலாம்.

   தொ.பே: 026-2227434, பக்ஸ்: 026-2227401, ஈமெயில்: necord@sltnet.lk

5. ஒப்பந்த ஆவணங்களை 2004 புரட்டாதி 22 இல் இருந்து 2004 ஐப்பசி 18 வரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து இது தொடர்பாக மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 10,000/= த்தை (கேள்வி ஆவணம் ஒன்றுக்கு) செலுத்தி கொள்வனவு செய்து கொள்ளலாம்.

6. கேள்வி கோருபவர் முன் தகுதிக்கு அவசியமான ஆவணமும் விலையிடப்பட்ட கேள்விகளின் இரண்டு பிரதிகளும் பொறி வைக்கப்பட்ட தனித்தனி உறைகளில் 7 ஆவது பந்தியில் குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட திகதி, நேரத்தில் கையளிக்கப்பட வேண்டும்.

7. அவ்வேலைக்குரிய ஒப்பந்தப் பிணைமுறியுடன் பொறிவைத்த அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் உரிய பிணைப்பணத்துடன் தலைவர், ஆளுநரால் நியமிக்கப்பட்ட கேள்விச் சபை, NECORD, 140, மின்சார நிலைய வீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு 2004 கார்த்திகை மாதம் 08 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன்பதாக கிடைக்க வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்கலாம்.

8. முன்கூட்டிய கேள்விகோரல் கூட்டமொன்று மேற்படி அலுவலகத்தில் 2004 ஐப்பசி மாதம் 22 ஆம் திகதி அன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

9. கேள்வி தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

சி.ரங்கராஜா,
பிரதம செயலாளர்,
தலைவர்,
ஆளுநரால் நியமிக்கப்பட்ட கேள்விச் சபை,
வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிக்கோட்),
திருகோணமலை.

(C-1373)

# நாம் யுத்த வெறியர்கள் அல்ல சமாதான விரும்பிகளே!

## அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன்

(அம்பாறை)

"நாம் யுத்த வெறியர்களல்ல, முழுமையாக சமாதான விரும்பிகளாகவே செயற்பட்டு வருகின்றோம். எமது தேசியத் தலைவரின் நிதானமும், பொறுமையும், சமாதானத்தின் பால் கொண்ட பெரும் அக்கறையும் இதனை சர்வதேச சமூகம்வரை உணர்த்தியுள்ளது."

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் த.குயிலின்பன் தெரிவித்தார்.

உலக சமாதான தினத்தையொட்டி திருக்கோயில் மெதடிஸ்த தேவாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட ஆராதனையின் பின்னர் அங்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

விடுதலைப்புலிகள், விசேட அதிரடிப்படையினர், பொலிஸார் உட்பட பொதுமக்கள் பெருந்தொகையானோர் இந்த ஆராதனை நிகழ் வில் கலந்துகொண்டனர்.

திகாமடுல்ல மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கனகசபை பத்மநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு ஆகியோரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் இந்த நிகழ்வில் தொடர்ந்து பேசுகையில் -

"புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு அமைதி நிலவும் கடந்த இரண்டரை வருடகாலத்திலும் நாம் எதிர்பார்த்த சமாதானமோ, தீர்வோ எட்டப்படவில்லை.

நாம் கோரி நிற்கும் எமது மக்களின் நியாயமான கோரிக்கைகள் எதனையும் வழங்க அரசு முன்வராதமை கவலைக்குரியதாகும்.

இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும், சிங்கள மக்களும் சமமான உரிமைகளுடன் வாழ வேண்டுமென்பதே எமது அவாவாகும். இதனை எமது போராட்ட கால ஆரம்பம் முதலே வலியுறுத்தி வருகின்றோம்.

தென்பகுதி சிங்கள மக்கள் அனுபவிக்கும் சகல சுதந்திரங்களையும், சலுகைகளையும், உரிமைகளையும் வட - கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்களும் அனுபவிக்க வேண்டும்.

எமது இந்த நியாயமான, யதார்த்தமான கோரிக்கையைச் சிங்கள ஆட்சியாளர்கள் உதாசீனம் செய்தே வருகின்றனர்.

இன்றைய சமாதான சூழ்நிலையிலும் நாம் எமது போராளிகள் பலரையும் இழந்தும், பொறுமை காத்து சமாதானத்துக்காக உழைதது வருகிறோமென்றால், எமது தேசியத் தலைவர் சமாதானத்தின் பால் காட்டும் பெரும் அக்கறைக்கு எடுத்துக் காட்டாகும்.

எமது தலைவரின் இப்பெரும் பொறுமையும், சமாதானத்தின் பால் கொண்டுள்ள அப்பழுக்கற்ற அக்கறையும் இன்று சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது.

நாம் யுத்த வெறியர்களாக ஒருபோதும் இருந்ததில்லை. சமாதானத்துக்காகவே என்றும் உழைத்துக் கொண்டிருப்பவர்கள்.

ஆனால், எமது பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. எமது மக்களின் சுயநிர்ணய உரிமையை சிங்கள அரசு வழங்காது தொடர்ந்தும் ஏமாற்றி வந்தால், அதனை எவ்வழியில் பெறமுடியுமோ அவ்வழியில் எமது மக்களுக்குப் பெற்றுக் கொடுப்போம். இதற்கு எவ்வித தயக்கமும் காட்டமாட்டோம்" இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# திருப்தியளிக்கக் கூடிய வகையில் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு

## திறைசேரி செயலாளர் தெரிவிப்பு

அரசாங்க ஊழியர்களுக்கு எதிர் வரும் வரவு செலவுத் திட்டத்தில் திருப்தி தரக்கூடிய வகையில் சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளதாக திறைசேரி செயலர் பி.பி.ஜெயசுந்தர தெரிவித்தார்.

நாட்டில் இராணுவம் உட்பட அரச ஊழியர்கள் சுமார் 8 இலட்சத்து 50 ஆயிரம் பேர் சேவையில் உள்ளனர்.

அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி நடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதில் இராணுவத்தினர் 3 இலட்சம் பேருக்கும். 80 ஆயிரம் பொலிஸாருக்கும் சம்பள உயர்வு வழங்கப்படவேண்டியது அவசியமாகவுள்ளது.

ஏற்கனவே அரசாங்கத்துறையில் பல திணைக்கள ஊழியர்கள் சம்பள உயர்வுகோரிப் பேராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பதவிக்கு வருவதற்கு முன்னர் - அரசாங்க ஊழியர்களுக்கு 70 வீத சம்பளம் உயர்வு வழங்கப்படும் என உறுதி வழங்கியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# கோதுமை மாவின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கும்!

(கொழும்பு)

கோதுமை மாவின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டதால் தம்மால் கோதுமை மாவின் விலையை அதிகரிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பிறிமா நிறுவனம் அறிவித்தது.

இது தொடர்பாக பிறிமா நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் அப்துல் காதர் தகவல் வெளியிடுகையில் -

கடந்த காலங்களில் எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்ட போதும், நுகர்வோரின் நலன்கருதி கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்படவில்லை.

எனினும் அரசாங்கம் பிறிமா நிறுவனத்துக்குச் செலுத்தவேண்டிய மானிய உதவிகளை உரியமுறையில் செலுத்தாமையால், இந்த நிலைப்பாட்டில் இருந்து பிறிமா நிறுவனம் விலகிச் செல்ல வேண்டிய நிலை தோன்றியுள்ளது எனத் தெரிவித்தார்.

தற்போது ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 22 ரூபாவாக இருப்பது குறிப்பிடத்தக்கது. (01)

# ஊழியர் வேலை நிறுத்தத்தால் சம்பளம் பெறுவதில் சிக்கல்

பல்கலைகழகங்களில் கல்விசாரா ஊழியர்கள் மேற்கொண்டு வரும் வேலை நிறுத்தத்தினால், பல்கலைக்கழகங்களின் பேராசிரியர் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் இந்த மாதத்துக்குரிய சம்பளப்பணத்தை வழங்க முடியாதுள்ளதாக - துணைவேந்தர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்குத் தெரிவித்துள்ளனர்.

13 பல்கலைக்கழகங்கள், 4 இணைந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் அதனோடு இணைந்த 22 துணைநிறுவனங்களில் கடமைபுரியும் கலாநிதிகள் உட்பட ஊழியர்கள் அணைவருக்கும் இந்த மாதம் 24 ஆம் திகதி சம்பளம் வழங்கப்படவேண்டும். கடந்த முதலாம் திகதி முதல் நடைபெற்று வரும் வேலைநிறுத்தத்தின் காரணமாக 12 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களுக்கு சம்பளம் வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக பல்கலைக்கழக துணைவேந்தர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் மெண்டிஸுக்கு தெரியப்படுத்தியுள்ளனர். தமது சிக்கலுக்குத் தீர்வுகாணும் வரை கல்விசாரா ஊழியர்கள் யாருமே சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளப்போவதில்லை என அனைத்துப் பல்கலைக்கங்களின் தொழிற் சங்கக் குழுவின் இணைச்செயலாளர் சாந்த பண்டார தெரிவித்தார்.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் சிக்கலுக்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு இதுவரை கிடைக்காததால் மேலும் வேலை நிறுத்தம் தொடரும் எனவும் அவர் தெரிவித்தார்.

# ஊர்காவற் படையினர் தமிழீழ நீதிமன்றில் ஆஜர்!

## சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட விடுதலைப்புலி உறுப்பினர்கள் 10 பேரை அரசாங்கம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதாலேயே, திருமலையில் கைதான இரண்டு ஊர்காவற்படையினரையும் தாம் விடுவிக்கவில்லை என அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமையன்று கிளிநொச்சியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கைது விவகாரங்கள் தொடர்பாக சமாதான வழியில் தீர்வு காணக்கூடியதாக இருந்தபோதும், படையினரால் கைது செய்யப்பட்ட புலி உறுப்பினர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியமையால் சமாதான வழியில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

எனவே ஊர்காவற்படையினரையும் தமிழீழ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்குத் தீர்மானித்திருப்பதாகவும் அவர்கள் இருவரும், போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு எதிராகச் செயற்பட்டமையாலேயே அவர்கள் இருவரையும் கைது செய்ததாகவும் அவர் இந்தச் சந்திப்பில் தெரிவித்தார்.

# இலங்கையின் வன வளங்களை அமெரிக்கா பொறுப்பேற்கவுள்ளது!

இலங்கை பெற்ற கடனுக்காக, அமெரிக்கா - இலங்கையின் வன வளங்களைப் பொறுப்பேற்று நிர்வகிக்கும் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

இலங்கை இதுவரை 1300 மில்லியன் டொலர்களைக் கடனாகப் பெற்றுள்ளது. இதில் சுமார் 13 மில்லியன் டொலர்களை இலங்கை தமக்குச் செலுத்தாமல் அதற்குப் பதிலாக நாட்டிலுள்ள பல வனங்களைக குறிப்பிட்ட காலங்களுக்கு நிர்வகிக்கும் பொறுப்பைத் தமது நாட்டு நிறுவனம் ஒன்றுக்கு வழங்கவேண்டும் என அமெரிக்கா கேட்டுக்கொண்டதற்கு அமைய, முன்னைய அரசாங்கம் அந்தத் திட்டத்தை ஏற்றுக் கொண்டிருந்தது. எனினும் அப்போது எதிர்க்கட்சியாக இருந்த தற்போதைய அரச தரப்பு எதிர்ப்புத் தெரிவித்துவந்தது.

தற்போது, அதே கட்சி அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு அதனைச் செயற்படுத்தவுள்ளதாக, சுற்றாடல் பாதுகாப்பு அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது. அந்தத் திட்டத்தின் மூலம் இலங்கையில் இருக்கக்கூடிய வனவளங்களின் இயற்கை மூலிகைகள் அனைத்தையும் அமெரிக்கா தமது நாட்டுக்குக் கொண்டு செல்லக்கூடும் எனவும் அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

அதேநேரம், குறிப்பிட்ட காலம் வரையில் அமெரிக்க நிறுவனத்தின் நிர்வாகத்தில் இலங்கை அரசாங்கம் தலையிடமுடியாத நிலை ஏற்படும் எனவும் அந்தச் சுற்றாடல் அமைப்பு எச்சரித்துள்ளது. (01)

# தமிழ் மக்களுக்கான உரிமையை வழங்கும் திட்டம் அரசுக்கு இல்லை!

## அரியநேந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)

"அரசிடம் வடக்கு- கிழக்கு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை தரக்கூடிய திட்டங்கள் எதுவுமில்லை. எமது உரிமையை எமது பலத்தின் மூலமே பெற முடியும்" என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு குருக்கள் மடம் கலைவாணி மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற பாலர் பாடசாலை மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த இரண்டு தசாப்தங்களாக 1 ஆம் கட்டம், 2 ஆம் கட்டம், 3 ஆம் கட்டம் என மூன்று கட்ட ஈழப் போர் எமது மண்ணில் இடம்பெற்று, விடுதலைப்புலிகளின் பலம் காரணமாக அரசுக்கும், எமது தேசியத் தலைவருக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. இரண்டரை வருடங்களாக உப்புச்சப்பு இல்லாத யுத்த நிறுத்தம் மட்டுமே உள்ளதே தவிர, நிரந்தர சமாதானத்தை கொண்டு வரக்கூடிய எந்தத் திட்டமும் அரசிடம் இல்லை.

விடுதலைப்புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார யோசனையின் அடிப்படையில் மீண்டும் பேசுவதற்குத் தயாரென விடுதலைப் புலிகள் திட்டவட்டமாகக் கூறியிருந்தும் தற்போதைய அரசு துட்டிக்கழித்து தமது படையைப் பலப்படுத்துவதிலும் யுத்தத்திற்கு வலிந்து இழுக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருவதைத் தெளிவாக காணக்கூடியதாகவுள்ளது.

இந்தநிலையில் தமிழ் மக்கள் அனைவரும் நிதானமான முறையில் சிந்தித்து எமது உரிமையை வென்றெடுக்க உழைக்க வேண்டும்.

அரசில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி. இனவாதக் கருத்துக்களை கக்கிக் கொண்டு சமாதானத்தை குழப்பும் முயற்சியில் ஈடுபடும்போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசுக்கு ஆதரவு கொடுத்து, இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை அடிப்படையில் விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்காக அரசுடன் இணைந்ததாகக் கூறுகின்றனர்.

எம்மைப் பொறுத்த வரையில் எமது விடிவு எமது கைகளில்தான் தங்கியுள்ளது. இதனை உணர்ந்து நாம் செயற்பட வேண்டும் எனவும் பா. அரியநேந்திரன் எம்.பி. கூறினார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி உரையாற்றுகையில் -

இந்த அரசாங்கத்தினாலோ வேறு சிங்கள அரசினாலோ பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தை வென்றெடுக்க முடியும் என ஒருபோதும் எவரும் நினைக்க வேண்டாம். எமது உரிமை, எமது படைப்பலத்தில் மட்டுமே தங்கியிருக்கிறது எனவும் கூறினார்.

கலைவாணி பாலர் பகல் பராமரிப்பு நிலையத் தலைவர் செ.சத்தியேஸ்வரன் தலைமையில் இடம் பெற்ற இந்தநிகழ்வில்,

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் த.கனகசபை, க.தங்கேஸ்வரி, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மா.தயாபரன், பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.உலகேஸ்வரன், சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர் எம்.எம். எச்.நயூமுதீன் உட்படப் பலரும் உரையாற்றினர்.

# பெரிய வெங்காயத்துக்கான இறக்குமதி வரி உயர்வு!

(கொழும்பு)

பெரிய வெங்காயம் இறக்குமதி தொடர்பிலான வரி அதிகரிப்பு விரைவில் அமுல் செய்யப்படவுள்ளதாக விவசாய அமைச்சர் அனுர குமார திஸநாயக்க தெரிவித்தார்.

நேற்று முதல் பெரிய வெங்காயத்துக்கான இறக்குமதி வரி 10 ரூபாவால் உயர்த்தப்பட்டுள்ளது.

இலங்கையில் பெரிய வெங்காயம் தற்சமயம் கிலோ ஒன்று 14 ரூபாவுக்கே விற்பனை செய்யப்படுகிறது.

இதனைத் தவிர்த்து பெரிய வெங்காயம் கிலோ ஒன்றை 24 ரூபாவுக்கு விற்பனை செய்வதன் மூலம் உள்ளூர் வெங்காய உற்பத்தியாளர்கள் நன்மை பெறுவர் என்ற அடிப்படையிலேயே இந்த இறக்குமதி வரி உயர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கச்சதீவை மீளத் தருமாறு இந்தியா கோரவில்லை!

## அமைச்சர் விஸ்வ வர்ணபால

கச்சதீவை மீண்டும் தம்மிடம் கையளிக்குமாறு இந்திய அரசாங்கத்திடமிருந்து உத்தியோகபூர்வமான கோரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை என பிரதி வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால தெரிவித்தார்.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, இலங்கை அரசிடமிருந்து கச்சதீவை குத்தகை அடிப்படையிலாவது பெற்றுக்கொள்ளுமாறு இந்தியப் பிரதமருக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார் என்ற செய்தி தொடர்பாக பி.பி.சிக்குக் கருத்துத் தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ண்பால - இந்திய மாநில அரசிடம் கச்சதீவை குத்தகை அடிப்படையில் மீளப் பெற்றுக்கொள்ளும் திட்டமொன்று இருக்கிறது. ஆனால், இந்த விடயம் தொடர்பாக இந்திய மத்திய அரசு எக்கருத்தினையும் வெளியிடவில்லை,

அத்துடன், முன்னாள் பிரதமர்களான சிறிமாவோ பண்டாரநாயக்க மற்றும் இந்திராகாந்தி ஆகியோர் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கையின் அதிகாரத்துக்குட்பட்ட கச்சதீவு ஒரு பிரயோசனமற்ற பகுதி.

இந்திய அரசாங்கம் கச்சதீவு தொடர்பான விடயத்தில் நேரடியாக தலையிடாது. ஒரு ஒப்பந்தத்தின் மூலமே இதற்கான தீர்வை ஏற்படுத்த முயலும் என பிரதி வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால மேலும் தெரிவித்தார்.

### வலுவிழந்தோருக்காக நடைபெறும்

# ஒலிம்பிக் நீச்சல் போட்டியில் ஐந்து புதிய சாதனைகள்!

(ஏதென்ஸ்)

வலுவிழந்தோர் ஒலிம்பிக் நீச்சல் போட்டியில் ஒரே நாளில் ஐந்து உலக சாதனைகள் நிகழ்த்தப்பட்டன.

கிரீஸ் தலைநகர் ஏதென்ஸில் வலுவிழந்தோர் ஒலிம்பிக் போட்டி நடக்கிறது. இதில் நீச்சல் போட்டிகளில் 594 வீர, வீராங்கனைகள் பங்கேற்கின்றனர். இவர்கள் வலுவிழந்தோர் தன்மையின் அடிப்படையில் பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நடந்த தகுதிச்சுற்று போட்டிகளில் சாதனை மேல் சாதனைகள் படைக்கப்பட்டன. 100 மீற்றர் பட்டர்பிளை எஸ் - 8 பிரிவில் அவுஸ்ரேலியாவின் பென் ஒஸ்டின் ஒரு நிமிடம் 05.9 வினாடியில் கடந்து புதிய சாதனை படைத்தார்.

எஸ் - 9 பிரிவில் மற்றொரு அவுஸ்ரேலிய வீரரான சாம் பிரம்ஹம் ஒரு நிமிடம் 04.24 வினாடியில் கடந்து சாதனை படைத்தார்.

200 மீற்றர் தனிநபர் மெட்லே எஸ்.எம். 7 பிரிவில் அமெரிக்காவின் ரூடி கார்சியா 2 நிமிடம் 42.20 வினாடியில் கடந்து புதிய சாதனை படைத்தார்.

100 மீற்றர் பிரீஸ்டைல் எஸ் - 4 பிரிவில் பிரேசிலின்



குளோடல்டா சில்வியா ஒரு நிமிடம் 19.36 வினாடியில் கடந்தார்.

பெண்கள் 100 மீற்றர் பட்டர்பிளை எஸ் - 9 பிரிவில் தென்னாபிரிக்காவின் பிரபல வீராங்கனையான நதாலியா டவுசியாட் ஒரு நிமிடம் 07.69 வினாடியில் கடந்து தனது சுய சாதனையை முறியடித்தார்.

### சீன ஓபன் ரெனிஸ்

# ரஷ்ய வீரர் யூஜெனி இறுதிப்போட்டிக்கு தகுதி

(பெய்ஜிங்)

சீன ஓபன் ரெனிஸ் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ரஷ்ய வீரர் மிகைல் யூஜெனி இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றார்.

சீன ஓபன் ரெனிஸ் போட்டி பெய்ஜிங்கில் நடைபெற்றுவருகின்றது. இதன் மொத்த பரிசுத்தொகை 5 லட்சம் அமெரிக்க டொலர்களாகும்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில், ரஷ்ய வீரர் மிகைல் யூஜெனியும் - தாய்லாந்து வீரர் பாரடான் ஸ்ரீசாப்பனும் மோதினர்.

இதில் ரஷ்ய வீரர் யூஜெனி 6-4, 6-4 என்ற செட் கணக்கில் 6 ஆம் நிலை வீரரான ஸ்ரீசாப்பனை வென்றார்.

2002 ஆம் ஆண்டு டேவிஸ் கிண்ண வெற்றியில் ரஷ்யாவின் நட்சத்திர வீரர் யூஜெனி, முன்னதாக நடைபெற்ற போட்டியில் இரண்டு முதல் நிலை வீரர்களான ரெய்னர் ஷுட்லா மற்றும் டெனிக் ஹர்பாடி ஆகியோரை வென்று அரையிறுதிக்குள் நுழைந்தார்.

22 வயதான மிகைல் யூஜெனி, தாய்லாந்து வீரரின் சக்தி வாய்ந்த ஷொட்களை சமாளித்து அரையிறுதியில் வெற்றிபெற்று இரண்டாவது முறையாக ஏ.டி.பி பட்டத்தை வெல்லும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்.




# சிம்பாப்வே பயணத்தை ஹர்மிசன் புறக்கணிப்பு

(லண்டன்)



இங்கிலாந்து கிரிக்கெட் அணி எதிர்வரும் நவம்பர் மாதத்தில் சிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் செய்து 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது.

இந்தப் போட்டியைப் புறக்கணிக்கப்போவதாக இங்கிலாந்து அணி வேகப்பந்து வீச்சாளர் ஹர்மிசன் அறிவித்துள்ளார்.

கடந்த ஆண்டில் நடந்த உலகக் கிண்ணப் போட்டியின்போது இங்கிலாந்து அணி சிம்பாப்வே சென்று விளையாடாது என்று முடிவு எடுக்கப்பட்டது.

அப்போதைய நிலையைவிட தற்போது சிம்பாப்வேயில் அரசியல் மற்றும் விளையாட்டு மோசமாகவே இருக்கிறது. எனவே சிம்பாப்வே செல்ல மாட்டேன் என்ற நிலையில் மாற்றம் இல்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## வலுவிழந்தோர் ஒலிம்பிக் போட்டியிலிருந்து...





# அரையிறுதிப் போட்டியில் அவுஸ்ரேலியாவை வீழ்த்துவோம்

## மைக்கல் வோகன் சூளுரை



அரையிறுதிப் போட்டியில் அவுஸ்ரேலியாவை வெல்வோம் என்று நம்பிக்கை தெரிவிக்கிறார் இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் கப்டன் மைக்கல் வோகன்.

மினி உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் எதிர்பார்ப்பைத் தூண்டும் அடுத்த சுற்றுக்குள் இங்கிலாந்து நுழைந்திருக்கிறது.

இன்று நடக்கும் முதல் அரையிறுதிப் போட்டியில் அவுஸ்ரேலிய - இங்கிலாந்து அணிகள் மோதுகின்றன. இதில் வென்றால் மினி உலகக் கிண்ண வரலாற்றில் முதன்முறையாக இறுதிப்போட்டிக்கு அவுஸ்ரேலியா தகுதிபெற முடியும். ஆனால் அப்படி நடக்காது. வெல்லப் போவது நாங்களே என்கிறார் இங்கிலாந்து கப்டன் மைக்கல் வோகன்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது -

அவுஸ்ரேலியா உலகின் மிகச்சிறந்த அணி. பலமான நியூஸிலாந்து அணியை மிகவும் சாதாரணமாக வென்று அரையிறுதிக்கு வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு எதிரான போட்டிக்காக நாங்கள் காத்திருக்கிறோம்.

எங்கள் அணியில் சில வீரர்கள் அவுஸ்ரேலியாவுக்கு எதிராக இப்போதுதான் முதன்முறையாக விளையாடப் போகிறார்கள். நம்பிக்கையுடன் களமிறங்குகின்றோம். கடந்த காலங்களில் சந்தித்த தோல்விகளுக்கு இப்போது முற்றுப்புள்ளி வைப்போம் என்றார் வோகன்.



**மினி உலகக் கிண்ணத்தில் இன்றைய அரையிறுதி ஆட்டம்**

**அவுஸ்ரேலியா - இங்கிலாந்து (எட்ஜ்பாஸ்டன்)**

### உதைபந்தாட்ட தரவரிசை

# தெற்காசிய நாடுகள் மோசமான நிலையில்

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் வெளியிட்ட தரவரிசைப் பட்டியலில் தெற்காசிய நாடுகள் உதைபந்தாட்டத்தில் மிகமோசமான நிலையில் இருப்பது தெரியவந்துள்ளது.

சமீபத்தில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிக்கான தகுதிச் சுற்று ஆட்டத்தில் தோல்வியுற்ற நிலையிலும், இந்தியா 4 படிகள் முன்னேறி 138 ஆவது இடத்தை பிடித்துள்ளது.

கடந்த மாதம் 142 ஆவது இடத்தில் இருந்த இந்தியா, 335 புள்ளிகளைப் பெற்று தற்போது 138 ஆவது இடத்தில் உள்ளது. இருப்பினும் கடந்த டிசம்பரில் இருந்ததைவிட 11 நிலைகள் இந்தியா கீழிறங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை 311 புள்ளிகளுடன் 143 ஆவது இடத்திலும், பங்களாதேஷ் 243 புள்ளிகளுடன் 158 ஆவது இடத்திலும் உள்ளன.

# இந்திய வீரர் ரதோருக்கு பயிற்சிக்கு 1½ கோடி ரூபா



(புதுடெல்கி)

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் துப்பாக்கி சுடும் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற ராஜ்யவர்தன்சிங் ரதோரின் பயிற்சிக்காக ராஜஸ்தான் அரசு 1.5 கோடி ரூபா வழங்கும் என்று முதல்வர் வசுந்தரா ராஜே சிந்தியா தெரிவித்தார்.

2008 ஆம் ஆண்டு பீஜிங்கில் ஒலிம்பிக்கில் பங்கேற்பதற்கு முன் பயிற்சி மேற்கொள்வதற்காக இந்த உதவியை வழங்க ராஜஸ்தான் அரசு முடிவுசெய்துள்ளது.

அரசு சார்பில் ரூபா 50 லட்சம் வழங்கப்படும். எஞ்சிய ஒரு கோடி ரூபாவை வர்த்தக சமூகத்திடமிருந்து திரட்ட முடிவுசெய்யப்பட்டுள்ளது.

வெள்ளிப் பதக்கம் வென்ற ரதோர், பீஜிங் ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வெல்வார் என்ற நம்பிக்கை உள்ளது. அவருக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய அரசு தயாராக உள்ளது என்றார்.

# செஸ் ஒலிம்பியாட்டில் ஆனந்த் பங்கேற்பு!

(புதுடெல்கி)

34 ஆவது ஒலிம்பியாட் போட்டி ஸ்பெயின் நாட்டில் அடுத்தமாதம் 14 ஆம் திகதி தொடங்குகிறது. இதில் 145 நாடுகளில் இருந்து 2175 வீர, வீராங்கனைகள் பங்கேற்கிறார்கள்.

இந்தப் போட்டியில் இந்திய ஆண்கள் மற்றும் பெண்கள் அணி பங்கேற்கிறது. இந்திய ஆண்கள் அணிக்கு ஆனந்த் தலைமை தாங்குகிறார்.

இதேவேளை, உலக செஸ் சம்பியன் போட்டிகளில் ஒருங்கிணைந்த புரிந்துணர்வு தேவை. உலக அளவிலான செஸ் போட்டியில் தற்போது நாம் பல்வேறு நிகழ்வுகளைக் கொண்டுள்ளோம். உலக செஸ் சம்பியன் போட்டிகளில் வீரர்கள் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள முடியாமல் விளையாட்டுப் பாதிக்கப்படுகின்றது.

செஸ் ஒலிம்பிக்கில் இந்திய அணி வெற்றி பெறுவதற்கு அதிகம் வாய்ப்புள்ளது. எங்களிடம் மிகச்சிறந்த அணியொன்று உள்ளதென ஆனந்த் தெரிவித்தார்.

# தொடர்ந்து மோசமான ஆட்டம்; இந்திய அணியில் மாற்றம் தேவை

## கங்கூலி தெரிவிப்பு



(பர்மிங்காம்)

ஐ.சி.சி சம்பியன் டிரொபி போட்டியில் நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டத்தில் இந்திய அணி பாகிஸ்தானிடம் தோற்றது. இந்தத் தோல்வி மூலம் இந்தியா அரையிறுதிக்குத் தகுதிபெறும் வாய்ப்பை இழந்தது.

பாகிஸ்தான் தொடருக்கு பிறகு இந்தியா தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்து வருகிறது. ஆசியக் கிண்ணம், ஹொலன்டில் நடந்த 3 நாடுகள் போட்டி, இங்கிலாந்து தொடர், ஐ.சி.சி சம்பியன் போட்டி ஆகிய நான்கு போட்டிகளில் தோற்றது.

பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் தோற்றது குறித்து இந்திய அணியின் கப்டன் கங்கூலி நிருபர்களிடம் கூறியதாவது.

வெற்றிக்கான அணியாக நாங்கள் இல்லை. மோசமான துடுப்பாட்டமே தோல்விக்குக் காரணம். கடந்த 4 மாதங்களாக இந்தியாவின் துடுப்பாட்டம் மோசமாக உள்ளது. சில வீரர்களின் ஆட்டம் நீண்ட காலமாக மோசமாக உள்ளது.

தொடர்ந்து மோசமாக விளையாடும் வீரர்கள் அணியில் நிலைத்து நிற்கமுடியாது. இந்திய அணியில் மாற்றம் தேவை. வீரர்களின் மாற்றத்தை தேர்வுக் குழுவினர் முடிவு செய்யவேண்டும்.

3 வேகப்பந்து வீச்சாளர்களும் சிறப்பாக வீசினார்கள். போராடியே தோற்றோம். நாணயச்சுழற்சியில் தோற்றது பெரிய விடயமல்ல. பாகிஸ்தான் ஒரு கட்டத்தில் 3 விக்கெட்டுக்கு 27 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்தது. யுகானாவும் இன்ஸமாமும் சிறப்பாக ஆடி அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றனர். இவ்வாறு கங்கூலி கூறினார்.

# சிங்களவர்கள் மகிழ்ச்சியாக வாழவேண்டுமென்றால் எங்களையும் மகிழ்ச்சியாக வாழ விடுங்கள்!



## அஞ்சலியுரையில் இளம்பரிதி

**எமது பாதுகாப்பும் தனித்துவமும், கௌர வமும் பேணிப் பாதுகாக்கப்படவேண்டும். சிங்கள வர்கள் மகிழ்சியாக வாழவேண்டுமானால், எங்களையும் மகிழ்ச்சியாக வாழவிடுங்கள். இதற்கு மதிப்பளித்தால் நாமும் யுத்தத்தில் ஈடுபடாமல் மகிழ்சியாக இருக்கலாம்.**

என முல்லைத்தீவு மாவட்டத் தில் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண் டிருந்தபோது, வீரச்சாவடைந்த விழி சிட்டி சங்கானையைச் சேர்ந்த வீர வேங்கை அன்புச்சிட்டுவின் அஞ் சலிக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட அரசி யற்துறைப் பொறுப்பாளர் சி.இளம் பரிதி தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கை யில் -

தனது துறையில் சாகடித்து வாழ்வை அர்ப்பணித்து எம் மக் களின் மனதில் வாழ்ந்துகொண்டி ருக்கிறார். இவரது இறப்பை எண்ணி யாரும் கண்ணீர்விடவில்லை. அவ ரது செயற்பாடுகள், நினைவுகள் அவர் எம்மோடு இருந்த காலத்தின் செய்த செயற்பாடுகள் பற்றி நினை த்துக் கண்ணீர் விடுகின்றோம். தேச மும், தேசியமும் வாழவேண்டும் என்று சொல்கிறவர்கள் எல்லோரும் எமது படையில் இணைந்துகொள்ள முடியாது. தன் உள்ளத்தை, தன் உடலை அனைத்தையும் இனத்துக் காகவும், குடும்பத்துக்காகவும் ஊருக்காகவும் தியாகம் செய்ய நினைக்கின்றவர்கள் தான் படை யில் இணைந்து கொள்ளமுடியும். பயிற்சியின்போது துரதிஷ்ட வச மாக இவரது இன்னுயிர் பிரிந்துவிட் டது. உணர்வுகள், எண்ணங்கள், ஆசைகள், கற்பனை கள் எல்லாம் போராளி ஒருவரின் உள்ளத்தில் கனவாகி நினைவா கின்றது. இக் கனவுகளை நினைவாக்க சென்ற வர் இன்று வீரச்சாவு அடைந்துவிட டார். இவரது இக்கன வுகள் நாளை இந்த தேசம் விடு தலை பெறுவ தன் மூலம் நினைவாகவேண்டும். இவர் உடல் மீது ஆணையிட்டுச் கூறுகின்றேன். எம்தேசம் விடுதலை பெறும். நாமும் தலை நிமிர்ந்து வாழ்வோம்.

சாவுக்கு அஞ்சாத தலைவரும் போராளிகள் இருக்கின்ற வரை, எந்த ஆயுதபலத்தாலும் எம்மை அழி க்கமுடியாது. அறிவுச் சிந்தனை யாலும், மக்களின்மேல் கொண்ட அன்பினாலும்தான் போராளி ஆகி ன்றனர். அந்த ரீதியில் வரலா ற்றுப் புகழ்மிக்க பெறுமதி மிக்க ஓர் குடும் பத்தை இங்கு காண்கின்றேன். வர லாற்றில் வாழ்நாளில் பெருமை சேர்த் திருக்கின்றாள் இவள்.

நாமும் இச்சமாதான காலத்திலே விட்டுக்கொடுத்து வளைந்து கொடு த்து சோதனைகளையும், வேதனை களையும், அழிவுகளையும் ஒரு புறம் தள்ளிவிட்டு ஓர் இடைக்கால வரைபைச் சமர்ப்பித்திருக்கிறோம். ஜனநாயகத் தேர்தல் மூலம் மக் கள் எமக்களித்த தீர்ப்பின் அடிப் படையில் இதனைச் சமர்ப்பித்துள் ளோம். இதனைவிட வேறெந்த தீர் வையும் நாம் பரிசீலிக்கமுடியாது. அவற்றை நாம் நிராகரிப்போம்.

யுத்ததை நாம் விரும்பவில்லை, அது எம்மீது திணிக்கப்படுகின்றது. திணிக்கப்படும் எந்த ஒரு யுத்தத் தையும் நாம் எதிர்கொள்ளத் தயா ராக உள்ளோம். எமது ஒவ்வொரு போராளியும் தற்கொலைப் போராளி யாகவே உருவாக்கப்படுகின்றனர். தனது இனத்துக்காக, நாட்டிற்காக, தன்னுயிர் நீக்கத் துணிந்த போரா ளிகளைக் கொண்டதுதான் எம் படையணி.

இவர்கள் இருக்கும் வரை, எமது மக்கள் அழியமாட்டார்கள், அழிக் கப்படமாட்டார்கள். மக்களாகிய உங்கள் பலம் தான் எங்கள் சக்தி. இந்தச் சக்தியின் மூலம் எமது இன் றைய போராட்டம் வெல்லப்பட வேண் டுமானால் அது மக்களாகிய உங் கள் கையில் தான் உள்ளது எனத் தெரிவித்தார்.

இந்த அஞ்சலி நிகழ்வில் நினை வுரை ஆற்றி பண்டிதர் இராசகுரு அவர்கள் தனதுரையில், சமாதான காலமாகிய இன்றைய காலகட் டத்தில் கூட இப்படியான சாவு இடம் பெற்றுள்ளது வேதனைக்குரிய ஒன்றாகும்.

நாட்டின் விடுதலைக்காக, சுபீ ட்ச வாழ்விற்காக, எமக்காக தன்னு யிர் நீத்து வீரவேங்கையாகி வித்து டலாக இங்கே துயில் கொள்ளும் இவரின் கனவை நினைவாக்க நாம் ஆற்றலாக இருந்து ஒரே லட்சி யத்துடன் போராடவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இறுதியாக இவரது வித்துடல், அவரது இல்லத்தில் இருந்து பாண்ட் வாத்திய இசையுடன் சங் கானை சிவப்பிரகாச மகாவித்தி யாலயத்திற்கு ஊர்வலமாக எடுத் துச் செல்லப்பட்டு, பொதுமக்கள், மாணவர்களின் அஞ்சலிக்காக வைக் கப்பட்டது.

இந்த நிகழ்வில், வலிகாமம் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ச.கைலாயநாதன், யாழ் மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கயல்விழி, கடற் புலி களின் பிரதேசப் பொறுப்பாளர் மணா ளன், வலிகாமம் கோட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம் பிறை, சங்கானை, மானிப்பாய் அரசி யற்துறைப் பொறுப்பாளர்கள் அன்பு, இன்பம் உட்பட பொது அமைப் புக்களின் பொறுப்பாளர் பவனீதனும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (48)

## புதிய கல்விப் பணிப்பாளர் நியமனம்

சங்கானை கல்விக்கோட்டப் பணிப் பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற சி.செல்லையாவின் இடத்துக்கு, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி யின் அதிபர் என்.சண்முகசுந் தர மும், தெல்லிப்பழை கல்விக் கோட் டப் பணிப்பாளராகக் கடமையாற்றி வலிகாமம் வலயத்திலிருந்து இட மாற்றம் பெற்ற கா.சந்திரபாலனின் இடத்துக்கு, சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் அதிபர் ச.கைலாயநாதனும் கேட்டக் கல்விப் பணிப் பாளர்களாக் பதவி உயர் வுப்பெற்றுச் சென்றுள்ளனர். (48)

# ஊழியர்களுக்கு சம்பள உயர்வை விரைவாக வழங்கக் கோரிக்கை!

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக மாணவரின் கல்வி நிலை பாதிக்கப்பட்டு வரு வதால் பல்கலைகழக கல்விசாரா ஊழியரின் சம்பள உயர்வினைத் துரிதமாக வழங்குமாறு யாழ். மாவ ட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜே ந்திரன் அரசாங்கத்திடம் வேண்டு கோள்விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் நேற்றுமுன் தினம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரி விக்கப்பட்டிருப்பதாவது -

1997ஆம் ஆண்டிலிருந்து இலங் கையில் உள்ள பல்கலைக்கழகங் களில் போதனை சாரா ஊழியர்களுக் கான சம்பள முரண்பாடுகள் குறி த்து பல கோரிக்கைகளும், போராட் டங்களும் நடைபெற்று வந்துள்ளன.

கடந்த ஆண்டு ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசா ங்கம் பல்கலைக்கழக போதனை சாரா ஊழியர்களின் பிரச்சினைக ளுக்கு நான்கு மாதகாலத்துள் தீர்வு காண்பதாக உறுதியளித்தது.

அது சாத்தியப்படாது போகவே, இவ்வாண்டு ஆட்சிப் பெறுப்பேற் றிருக்கும் இன்றைய அரசாங்கம் இந்தச் சம்பள முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு மீண்டும் நான்கு மாத கால அவகாசம் கோருகின்றது.

இவ்வாறு ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளைத் தீர்த்துவைக் காது தொடர்ந்தும் இழுபறி நிலை நீடிக்குமானால் பல்கலைக்கழக மாண வர்கள் மேலும் பாதிப்புக்களுக்கு ஆளாக நேரிடும் இதனால் அரசு இந்த விடயத்தில் விரைவான தீர்வெ டுத்து ஊழியர்ளுக்கான சம்பள உயர்வை வழங்கி, மீண்டும் பல் கலைக்கழங்களின் சீரான செயற் பாட்டிற்கு வழிவகுக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



யமஹா வெளியிணைப்பு இயந்திரங்கள் திருத்தும் பயிற்சி முடிவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜி லிங்கம், சம்மேளனத் தலைவர் சி.தவரட்ணம், பொது முகாமையாளர் இ.இரா சாராம், யமஹா கம்பனி பயிற்றுவிப்பாளர்கள் மிட்சுயி, சின்தக்கா, கடற்புலி களின் அரசியற்துறையினர் ஆகியோருடன் சான்றிதழ் பெற்றுக்கொண்ட பயிற்சியாளர்களையும் காணலாம். (21)

# உலக வங்கி குழுவொன்று யாழ்ப்பாணம் வரவுள்ளது

யாழ். குடாநாட்டுக்கு விஜயமொ ன்றை மேற்கொண்டு உலக வங் கியின் குழுவொன்று எதிர்வரும் 27ஆம் திகதி வருகைதரவுள்ளது.

உலக வங்கியின் நிதி உத வியுடன் யாழ். மாவட்டத்தில் முன் னெடுக்கப்பட்டு வரும் வேலைத் திட்டங்கள் தொடர்பாக பார்வை யிடும் நோக்கிலேயே, இந்தக் குழு யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவு ள்ளது.

உலக வங்கியின் நிதி உதவி யுடன் 125 வீடுகள் அமைப்புத் திட்டத்தை பார்வையிடவுள்ளதாக தெரியவருகிறது. யாழ். குடாநாட் டில் அறிமுகப்படுத்தப்படும் 125 வீடு கள் அமைக்கும் திட்டத்தை அவர் கள் பார்வையிடவுள்ளதாகத் தெரி விக்கப்படுகின்றது.

வடக்கு-கிழக்கு மாவட்டங்கள் தோறும் 100 வீடுகள் கடந்த கால யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப் பட்டு குடும்பங்களுக்கென உலக வங்கி வீடுகளைக் கட்டி, வழங்க முன்வந்துள்ளது.

மலசல கூடவசதிகளுடன் கொண்ட இந்த வீடுகளைக் கட்டுவதற்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் ஒருவீட்டுக்கு ஒதுக்கியுள்ளது. அத்துடன் யாழ். குடாநாட்டில் மேல திகமாக 25 வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது. உலக வங்கி மருதங்கேணி உதவி அர சாங்க அதிபர் பிரிவிலுள்ள ஆழிய வளையில் உலக வங்கி 25 வீடு கள் அமைத்துக்கொடுக்கின்றது என் பது குறிப்பிடத்தக்கது. (17)

# பனை முறிந்து வீழ்ந்து வீடு முற்றாகச் சேதம்!

இரவு நேரம் வீட்டின் மீது பனை மரம் முறிந்து விழுந்ததில் வீடு பலத்த சேதம் அடைந்தது. வீட்டி னுள் படுத்திருந்தவர்கள் தெய்வா தீனமாக உயிர்தப்பினர்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக் கிழமை வடமராட்சி கிழக்கு உடுத் துறையில் நடைபெற்றது. இதனால், செல்லத்துரை தம்பிஐயா என்பரின் வீடு பலத்த சேதத்துக்கு உள்ளா கியது. வீட்டினுள் மனைவியும் பிள் ளைகளும் படுத்திருந்ததாகவும், தெய் வா தீனமாக எந்தவித காயமுமி ன்றி அவர்கள் உயிர் தப்பினார்கள் என அவர் தெரிவித்தார்.

தனது வீட்டிற்கு அருகிலுள்ள பனைமரத்தின் மேற்பகுதியில் ஷெல் பட்டு சேதமுற்றிருந்த பகுதியில் முறிவு ஏற்பட்டுள்ளதாக அவர் தெரி வித்தார்.

இந்தப் பிரதேசத்தில் ஷெல்லி னால் பாதிக்கப்பட்ட பல பனை மரங் கள காணப்படுவதால், பலத்த காற்று வீசும் போது மேலும் பனை மரங் களை முறிந்து விழக்கூடும் என மக் கள் அச்சம் தெரிவித்தனர். (122)

# நகர அபிவிருத்திக்கென குழுவொன்று நியமனம்

யாழ். நகரின் அபிவிரத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப் பதற்காக யாழ். நகர அபிவிருத்திக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

யாழ். நகரிரல நவீன நகரத்துக்குரிய அம்சங்களுடன் கூடிய நகராக் கும் முயற்சிக்கான குழுவில் பலதரப்பட்ட உயர் அதிகாரிகளும் அங்கத்து வம் பெற்றுள்ளனர்.

யாழ். மாநகர சபையின் ஏற்பாட்டிலான இக்குழு யாழ். நகரின் அபி விருத்திக்கான உள்ளூர் மற்றும் வெளியூர் அரச மற்றும் அரச சார்ப்பற்ற அமைப்புக்களின் நிதியுதவியையும் ஆலோசனைகளையும் ஒருங்கிணைத் துச் செயற்படும். (17)

## வழக்கு தொடர நடவடிக்கை

வலிகாமம் வடக்கு பிரதேச செய லகத்தினால் அனுமதியின்றிக் கட் டப்பட்ட கட்டடங்களின் உரிமை யாளர்களுக்கு எதிராக, வழக்குத் தொடர்வதற்கான சட்ட நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வரு வதாக, பிரதேச செயலர் செல்வரத் தினம் தெரிவித்தார். (72)

# நாகர் கோவில் குண்டுத்தாக்குதலில் பலியான மாணவர்களின் நினைவு தினம்

1995ஆம் ஆண்டு நாகர்கோவில் மகாவித்தியாலயத்தின் மீது குண் டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட போது, பலியான 20 மாணவர்களின் ஒன்பதாவது நினைவுதினம் நாளை நாகர்கோவில மகா வித்தியாலயத் தில் உணர்வு பூர்வமாக அனுஷ் டிக்கப்படவுள்ளது.

பாடசாலையின் அதிபர் சி.மகேந் திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த அஞ்சலி நிகழ்வில் கல்விச் சமுகத்தினர், விடுதலைப்புலிகளின் பிரமுகர்கள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். பலியான மாண வர்களின் திருவுருவப்படங்கள் வைக் கப்பட்டு, அஞ்சலி செலுத்தப்படவுள் ளது.

1995ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி வெள்ளிக்கி ழமை பகல் 12மணியளவில் விமா னப்படை பாடசாலை மீது பாரிய குண்டுகளை வீசியதில் 20 மாண வர்கள் துடிதுடித்து பலியாகினர். 10இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் மரணமடைந்தனர். மாணவர்கள் பொது மக்கள் என 50ற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக் கது. (122)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : த.கம்சன்

முகவரி : யாழ்ப்பாணம்


# திலீபன் நினைவு தினத்தை முன்னிட்டு தென்மராட்சியில் மருத்துவ முகாம்

(தென்மராட்சி)

தென்மராட்சிக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் தியாகி லெப்டினன்ட் கேணல் திலீ பனின், 17 ஆவது ஆண்டு நிறைவு நாளையொட்டி நேற்றுமுன்தினம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் மருத்துவ முகாமொன்று நடத்தப் பட்டது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தி னரின் அனுசரணையுடன் நடை பெற்ற இந்த மருத்துவமுகாம், நேற் றுமுன்தினம் காலை 9 மணிமுதல் 2 மணி வரை நடைபெற்றது.

தென்மராட்சி கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செலயலா ளர் சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச் சுடரினை யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் என்.ரவிராஜ், சாவ கச்சேரி பிரதேச லயன்ஸ் கழகத் தலைவர் கா.நவரத்தினம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இங்கு நடைபெற்ற மருத்துவ முகாமில் 500 வரையிலான மக்கள் நன்மை பெற்றனர். ஏற்கனவே, மூக் குக் கண்ணாடிக்கு விண்ணப்பித்த வர்களுக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழ கத்தினரின் ஏற்பாட்டில் மூக்குக் கண் ணாடிகளும் வழங்கப்பட்டன. (29)

## பல்சுவை அரங்கு

# இதயத்தை அறுக்கும் சிகிச்சை



இதய அறுவை சிகிச்சை செய்த பலர் இப்போது பலவேறு துன்பங்களால் அவதிப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். 82 ஆயிரம் இதய நோயாளிகளுக்கு மேற்கொள்ளப் பட்ட ஆராய்ச்சிகளின்படி, 2001 இற்கும் 2003 இற்குமிடையிலான காலப்பகுதியில் 1.8% இறப்பு அதிகரிததிருக்கின்றது.

இதற்குரிய காரணம - நீரிழிவு நோயிருக்கும் பொழுது, இதய அறுவை சிகிச்சை தோல்வியில் முடிகின்றது. இதன் காரணமாக இதய அறுவை சிகிச்சை செய்பவர்களுடைய எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. ஆனால், இதய அறுவைச் சிகிச்சையை மேற்கொள்வதற்கு முன்பு நோயாளிகளுக்கு முழுப்பரிசோதன்னை மேற்கொள்ளப் படுகின்றது.

அதேநேரம் நீரிழிவு நோயாளிகளுக்கு இதய அறுவைச் சிகிச்சை செய்யப்படுவதில்லை. அப்படியிருந்தும் வைத்தியர்களால் அவதானிக்கப்படாத சில நோய்கள் இந்த அறுவைச் சிகிச்சைக்கு பெரும் பாதிப்பை உண்டு பண்ணுகின்றன.

இதய அறுவைச் சிகிச்சை செய்தவுடன் ஏற்படுகின்ற சுகம் - பின்பு போகப்போக இருப்பதில்லை என்று சில வயது முதிர்ந்த நோயாளிகள் ஆதங்கப்படுகின்றார்கள். இதற்கு வைத்தியர்கள் அவர்களது முதிர்ச்சியை காரணம் காட்டி தங்களை தப்பிக்கொள்ளவைக்கின்றார்கள்.

# பாதுகாப்பான செயற்கை விதைகள்





ஐரோப்பிய நாடுகள் செயற்கையாகத் தயாரிக்கப்படுகின்ற விதைகளை பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்த வேண்டாம் என அறிவுரை கூறியிருந்தன. ஆனால், தற்போது ஐரோப்பிய நாடுகளின் அமையம் இந்த செயற்கை விதைகளைப் பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தலாம் என அனுமதி வழங்கியிருக்கின்றது.

கோதுமை இனம் எம்.ஓ.என். 810 செயற்கையாக உருவாக்கப்பட்டது. இது பூச்சிகளை எதிர்க்கக் கூடியதானதாக இருக்கின்றது.

இந்த வகை இனங்கள் இப்போது கோதுமை உற்பத்தியில் ஐரோப்பிய நாடுகளில் பெரும்பங்கு வகிக்கின்றன. இவை பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் நாடுகளில் அதிகம் பாவனையில் இருககின்றன. ஆனாலும் பாரம்பரியமான இயற்கை விதைகள் போல இவை இல்லை என்று விவசாயிகள் கருதுகின்றார்கள்.

மற்றையது இவறறுக்கு செயற்கைக் கவனிப்பு அதிகம் தேவை என்ற கருத்தும் நிலவுகின்றது.

ஐரோப்பிய நாடுகள் அமையத்தின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாகத்தினுடைய கருத்துப்படி, இந்த செயற்கை விதைகள் உடலுக்குத் தீங்கு பயக்கமாட்டாது எனவும், அத்துடன் ஆரோக்கியமான விளைவுகளை மட்டுமே மனித உடலுக்கு ஏற்படுத்தும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நோவுக்கு மருந்தாகும் தாவரக் குளிசை

ஐரோப்பிய நாடுகளில் கஞ்சாவுக்கு நிகரான ஒருவகைச் செடி ஒன்று - நோய்களைக் குணமாக்கக் கூடியதாக கண்டுபிடிக்கபபட்டிருக்கிது. ஏறக்குறைய 15 வாரங்கள் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின்படி, இந்தத் தாவரங்களில் இருக்கின்ற ஒரு



பதார்த்தம் நோ மற்றும் வலிகளில் இருந்து விடுதலைதரக் கூடியவாறு காணப்படுகின்றது.

உளைவு மற்றும் வாத நோய்களுக்கு மின்சார சிகிச்சை மற்றும் ஊசிமுனைச் சிகிச்சை ஆகியன அவ்வளவாகப் பலனளிக்காது போகின்றது. அத்துடன், இதன் காரணமாக மூளையும் பாதிப்படைகின்றது.

இவற்றையெல்லாம் களையும் முகமாக இந்தத்தாவரம் இருப்பதாக வைத்தியத்துறைக் கல்விமான்கள் தெரிவித்திருக்கின்றார்கள். நோயாளிகள் இந்தத் தாவரத்திலிருந்து உருவாக்கப்பட்ட 25 மில்லிகிராம் குளிசைகளை ஒவ்வொரு நாளும் உண்ணும்படி வைத்தியர்களால் சிபாரிசு செய்யப்பட்டிருக் கின்றது. ஏறத்தாழ 667 பேரிடம் ஆராய்ச்சி செய்தபோது, அவர்களுக்கு நல்ல பயன் கிடைத்திருப்பதாகக் கூறப்பட்டிருககின்றது. ஆனாலும், இவ்வகை மருந்துகளுக்கு அனுமதி பெறுவதில் சிக்கல்கள் தோன்றியிருக்கின்றன. ஏனெனில், அவற்றின் மூலம் பக்க விளைவுகள் ஏதேனும் இருக்கின்றதா என்ற ஆராய்ச்சி இப்போது நடைபெற்றிருக்கின்றது. அது வெற்றியளித்து விட்டால் இது விரைவாகச் சந்ததைக்கு வந்துவிடும்.

# சனியை ஆராய்ச்சி செய்யும் காசினி

சனிக்கிரகத்தில் புதிய வளையம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. ஜரோப்பிய விஞ்ஞானிகளுடைய கருத்து படி, சனிக்கிரகத்தில் எண்ணற்ற வளையங்கள் காணப்படுவதாகவும், அவை பல்வேறுபட்ட நிறங்களில் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.



ஆனால், இது எவ்வளவு தூரம் உண்மை என்பதைக் கண்டறிய முடியாது ஆய்வாளர்கள் தடுமாறிக்கொண்டிக்கின்றார்கள் . இப்போது கண்டுபிடிக்கப்பட்ட வளையத்தை - காசினி என்ற செயற்கைக் கோள் கண்டுபிடித்தித்திருக்கின்றது. இதேவேளை சனியினுடைய துணைக் கோள்கள் 34 ஆக அதிகரித்திருக்கின்றது.

காசினி விண்கலம் மிகவும் சக்தி வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. இதில் காணப்படுகின்ற அன்ரனாக்கள் மிகவும் உணர்திறன் மிக்கவை. இதில் இரண்டு கமராக்கள் காணப்படுகின்றன. இவை 300,000 படங்களைச் சுட்டுத்தள்ள வல்லன. இதிலுள்ள மின்பிறப்பாக்கிகள் 750 W மின் வலுவை வழங்கக் கூடியவை. சனிக்கிரகத்தில் காணப்படும் வளையங்கள் ஆங்கில உயிர் எழுத்துக்களால் பெயரிடப்படுகின்றன. அதிலே உதாரணமாக ஏ வளையம் எவ் வயையம் ஆகியன அகன்றவையாகக் காணப்படுகின்றன. இவற்றுனுடைய அகலம் ஏறக்குறைய 300 கிலோ மீற்றர் ஆகும்.

# றொக்கட்களின் தோற்றம்



இரண்டாம் உலகப் போரிலேகூட அதிகளவு றொக்கட்டுக்கள் பாவனையில் இருந்ததாகத் தற்போது அறியப்பட்டிருக்கின்றது. ஜேர்மனியினுடைய தொழில்நுட்பத்திறனால் உருவாகிய வி-2 றொக்கட்டுக்கள் - அமெரிக்க மற்றும் சோவியத் நாட்டுக்கூட்டுப் படைகளால் கைப்பற்றப்பட்டன. அங்கே இருந்த பெருமளவு பொறியியலாளர்கள் அமெரிக்க நாட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். மீதியிருந்தவர்கள் சோவியத் நாட்டுக்குக் கடத்தப்பட்டனர். இவர்கள் மூலம் உருவாக்கப்பட்ட பலதரப்பட்ட றொக்கட்டுக்கள் ஆராய்ச்சிகளுக்கு முதன்முதலில் பயன்பட்டன. முதன்முதலில் 1957 ஆம் ஆண்டில் உலகின் முதலாவது ஐ.சி.பி.எம் ஆர்-7 கண்டறியப்பட்டது.

1957 ஒக்டோபர் 4 ஆம் திகதி சோவியத் நாடு ஸ்புட்னிக் 1 என்ற விண்கலத்தினை ஏவியது. இது ஒரு கூடைப்பந்தளவாகக காணப்பட்டது. இதேவேளை, அமெரிக்க றொக்கட்டுக்கள் மூலம் ஏவுகணைகளை ஏவுவதற்கு, அதே 1957 ஆம் ஆண்டு முயற்சிகளை மேற்கொண்டது. 31 ஆம் திகதி ஜனவரி மாதம் 1958 ஆம் ஆண்டு எக்ஸ்புளோறர் - 1 என்ற அமெரிக்கச் செய்மதி 11.55 இரவு வெடித்துச் சிதறியது. 12 ஆம் திகதி ஏப்பரல் மாதம் 1961 ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் ஜோன் எவ் கெனடி - மனிதன் பூமியிலிருந்து புறப்பட்டுச் சந்திரனுக்குச் சென்று பாதுகாப்பாகத் திரும்பக்கூடிய எல்லா முயற்சிகளையும் செய்யுமாறு விஞ்ஞானிகளுக்குப் பணிப்புரை விடுத்தார். இதேவேளை அப்பலோ - 7, அப்பலோ - 11, சற்றேன் 1 பி ஆகியனவும் விண்வெளியல் அமெரிக்காவால் ஏவப்பட்டன. 20 யூலை 1969 ஆம் ஆண்டில் சற்றேன் வி றொக்கட் வெடித்துச் சிதறியது. இப்படியாக பல தியாகங்களைச் செய்துதான் விண்வெளி ஆய்வுகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

# மூளையும் கனவும்



மூளையில் கனவின் மத்தி என்று ஒரு இடம் இருப்பதாகவும், அதன் மூலமே கனவுகள் உருவாகுவதாகவும் அறியப்பட்டுள்ளது. சுவிற்சர்லாந்தில் இருக்கின்ற பல்கலைக்கழகத்தில் இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஒரு 73 வயது பெண் - பாரிசவாதநோயால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். இதன் காரணமாக அவருடைய மூளையும் பாதிப்படைந்து இருந்தது. இதன் காரணமாக அவருடைய நினைவாற்றல் கூட தடைப்பட்டிருந்தது. ஆனால், சில வேளைகளில் ஒருகிழமையில் 3 அல்லது 4 தடவைகள் அவருக்கு கனவு ஏற்பட்டதாகக் கூறப்பட்டது.

உண்மையில் சிலருக்கு மூளையின் மத்திய பகுதி பாதிப்படைவதால் தான், இந்த நிலை ஏற்படுவதாக வைத்தியர்கள் கூறுகின்றார்கள். இவருடைய மூளையை ஸ்கான் செய்து பார்த்தபொழுது, மூளையின் நடுப்பகுதி மட்டும் பாதிக்கப்பட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. இவர் நித்திரை செய்வதுபோல சிலவேளைகளில் இருப்பார். ஆனால், இவருடைய மூளை இயங்கிக் கொண்டிருக்கும்.

ஆனால் உணர்ச்சிகள் கட்டுப்பட்டு இருக்கும். இதன் காரணமாகத்தான் அவர் உணர்ச்சியற்றுக் காணப்படுகின்றார். கனவுகள் சிலவேளைகளில் பாரிசவாத நோயால் இல்லாமல் போகும். ஆனால், சிலர் கோமாநிலையில் இருந்து எழுகின்ற பொழுது அவர்கள் கனவிலிருந்து எழுவதுபோல எழுகின்றார்கள். அவர்களின் மூளையின் மத்திய பகுதி பாதிப்படையாது இருக்கும்.

## திரை விமர்சனம்

# குடைக்குள் மழை

கிறுக்குத்தனமான பெயர்களைப் படங்களுக்கு வைப்பதில் பெயர்போன பார்த்தீபனுடைய படம். இது வித்தியாசமான முயற்சி.

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சிக்காக ஓட்டோ டிரைவராக மதுமிதா நடிக்கின்றார். பார்த்தீபன் அதனை உண்மை என்று நம்பி மதுமிதாவை ஆழமாகக் காதலிக்கின்றார்.





அவருடைய காதல் தோல்வியுற, மனநோயாளியாக அவரது வாழ்க்கை மாறுகின்றது.

நீளமாக முதல் பாதியை சுவாரசியமாகக் கொண்டு போய், இரண்டாவது பாதியில் ரசிகர்களை அலுக்க வைத்திருக்கின்றார்.

கமலுக்குப் போட்டியாகப் பார்த்தீபன் நிறைய முத்தக் காட்சிகளை வைத்திருக்கிறார். ஆனாலும், நிறையப் பிளாஷ்பேக்குகள் வந்திருக்கின்றன.

பார்த்தீபனையும், மதுமிதாவையும் மட்டுமே சுற்றிச் சுற்றிக் கதை செல்கின்றது. பாத்திரங்கள் சரியான குறைவு.

சிங்கப்பூர்க்காரரான பார்த்தீபனுடைய தோற்றமும், நடிப்பும் தோல்வி. மதுமிதாவின் நீடிப்பு இயல்பாக உள்ளது. பொலிஸ் இன்ஸ்பெக்டராக ஸ்ரீராமன் நடித்திருக்கிறார். கார்த்திக்ராஜாவின் இசையில் எங்கோ போய் என்ற பாடல் இனிமையானதாக உள்ளது.

சுரேஷ்ராஜாவின் ஒழுங்கமைப்பு நேர்த்தியாக உள்ளது. கதை, வசனம், இயக்கம் எல்லா வேடங்களையும் பார்த்தீபன் எடுத்திருக்கிறார். குடைக்குள் மழை மலைப்பில்லை.

- PNS

# பற்றரி எரிபொருள்

புதிய லிதியம் பற்றரிகளைப் பயன்படுத்தி, வெப்பநிலையைக் குறைக்கக்கூடிய செயற்பாடுகள் நடைபெற்று வருவதாக ஐரோப்பிய நாடுகளில் இருக்கின்ற சில பல்கலைக் கழகங்கள் தெரிவித்திருக்கின்றன.



இந்தப் பற்றரிகள் தற்போது வெப்பநிலையைக் குறைக்கக்கூடியளவுக்கு இருந்தாலும், இதனை மீள சார்ஜ் செய்வதற்கான செலவு மிகவும் கூடுதலாக இருக்கின்றது. இதன் காரணமாக பெருமளவு காற்றாடிகளை உருவாக்கி, அதன்மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்து, அதன்மூலம் லிதியம் பற்றரிகளை சார்ஜ் செய்து, அவற்றைப் பல்வேறு உபகரணங்களுக்குப் பாவிப்பதால், சூழல் மாசடைதலைப் பெருமளவு குறைக்கக் கூடியதாக இருக்கும் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றார்கள்.

பெற்றோல் மற்றும் டீசல் வாகனங்களை இந்த பற்றரிகள் மூலம் ஓடவைக்கலாம் என்ற கருத்தும் நிலவுகின்றது. இந்த ஆராய்ச்சி ஏறக்குறைய 2020 ஆம் ஆண்டளவில் வெற்றியளிக்கும் எனக் கூறப்படுகின்றது. சாதாரணமாகப் பாவிக்கின்ற பெற்றோலைவிட மூன்று மடங்கு சக்தி இந்த பற்றரிகளுக் குத் தேவைப்படும் என தொழில்நுட்ப வியலாளர்கள் கூறுகிறார்கள்.



தற்போது ஹொண்டா கம்பனி இந்த வகையான லிதியம் பற்றரிகளை எரிபொருளாகப் பாவிக்கும் முயற்சிகளில் முன்நிற்கின்றது.

ஆனாலும், இதில் ஏற்படும் செலவு இந்தக் கம்பனியின் முயற்சிகளை ஆமை வேகத்தில் நடைபோட வைத்திருக்கின்றது.

# வருகிறது புகைக்குத் தடை



சூழல் மாசடைவதன் மூலம் பொதுவாக எல்லா வயதினரும் சுவாச நோய்களுக்கு உட்புடுகிறார்கள். இதற்குக் காரணம் - கூடுதலாக வளி மாசடைவதாகும்.

விஞ்ஞானிகளுடைய கூற்றுப்படி பார்த்தால், ஏறக்குறைய 1759 பருவ வயதுப் பிள்ளைகள் பரிசோதிக்கப் பட்டதில், 80% மாணவர்கள் - சுவாச நோயால் பீடிக்கப்பட்டிருகிறார்கள்.

18 வயதுக்கும், அதற்குக்கீழுள்ள பிள்ளைகளுக்குமே சுவாசப்பை நோயகள் கூடுதலாக ஏற்படுகின்றன. என்பது கலிபோர்னியப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களின் முடிவு.

அதிகரித்து வரும் வாகனப்புகையும் சிகரட் புகையுமே வளிமாசடைதலுக்குரிய பிரதான காரணங்களாகக் கருதப்படுகின்றன. தற்போது அமெரிக்க நாடுகள் வாகனப் புகையைக் கட்டுப்படுத்தவதில் மிகவும் ஊக்கமாக இருக்கிறன. இவற்றுக்குப்பல கடுமையான சட்டங்களும் இயற்றப்பட்டு, அமுல்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன.

இந்த நாட்டினைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகளும் இவற்றைப் பின்பற்றக்கூடும் என்ற கருத்தும் நிலவுகின்றது. ஜப்பான் நாட்டுக்கார்கள் மற்றும் வாகனங்கள் புகை குறைக்கக்கூடிய வகையில் சைலன்சர்கள் கொண்டவையாகத் தற்போது உருவாக்கப் படுகின்றன.

# சிக்கலில் இன்ரெல் கம்பனி

கணினி உலகில் நாளுக்கு நாள் புதுமை புகுத்தும் இன்ரெல் கம்பனி - தற்போது வைரஸ்களுக்கு எதிரான கணினிகளை உற்பத்தி செய்வதில் மிகவும் ஊக்கமாக இருக்கின்றது. அண்மையில் நடைபெற்று முடிந்த சர்வதேச இன்ரெல் நிறுவனப் பிரதிநிதிகளுக்கான கூட்டத்தில் இது பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டது. இன்ரெல் நிறுவனம் ஏறக்குறைய 100 பில்லியன் வலையமைப்பு விரிவுகளை உலகளாவிய ரீதியில் வைத்திருக்கின்றது. சிலவேளைகளில் கணினி வைரஸ்கள் - இந்த வலையமைப்பு மூலமே அனுப்பப்படுவதால், இது இலகுவில் பரவிக்கொள்கின்றது.



அதனால் உலகம் முழுவதும் கணினிச் செயற்பாடுகள் பாதிக்கப் படுகின்றன.

இந்த வலைப்பின்னல் 429 முடிச்சுகளையும், 181 தலைமைக் கட்டளை மையங்களையும், 150 ஆராய்ச்சிப் பல்கலைக்கழகத்தினையும் தன்னகத்தே கொணடிருக்கின்றது.

ஆனால், இதனுடைய இன்ரநெட் வலையமைப்பு இலகுவில் வைரஸ் தாக்கத்துக்குள்ளாவதால், வேறு ஒரு அற்புதமான வைரஸ் தாக்கத்துக்குட்படாத இன்ரநெட் வலையமைப்பைக் கொண்டதாக உருவாக்கப்பட வேண்டிய கட்டாயத்தில் இன்ரெல் நிறுவனம் இருக்கின்றது.

தற்போது காணப்படுகின்ற இன்ரநெட் அமைப்புக்கு ஏறக்குறைய 30 வடங்கள் வயதாகின்றது. மிகவும் பழைமை வாய்ந்த இந்த அமைப்பு மாற்றப்படவேண்டும். அது இன்ரெல் நிறுவனத்தால் மட்டுமே முடியும்.

# மிகச்சிறிய நட்சத்திரம்



விண்வெளி ஆராய்ச்சியாளர்களால் மிகச் சிறிய நட்சத்திரம் ஒன்று படம் எடுக்கப்பட்டுள்ளது.

இது 2எம்1207 என்று அழைக்கப்படுகின்றது. இது 230 ஒளி யாண்டுகள் தூரத்தில் இருக்கின்றது. யேப்பன் தொலைக்காட்டியால் இந்தச் சிறிய நட்சத்திரம் படம் பிடிக்கப்பட்டிருக்கின்றது.

கலிபோர்னியாவைச் சேர்ந்த பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இந்தச் சிறிய நட்சத்திரம் - புவியிலும் பத்து மடங்கு சிறியது எனக் கூறியிருக்கின்றார்கள்.

8.2 மீற்றர் ஆரையுடைய 4 தொலைக்காட்டிகள் காணப்படுகின்றன. இது எல்லாவற்றினதும் சேர்க்கையாக யேப்பன் தொலைகாட்டி இருக்கின்றது.



ஆனால், இந்த நட்சத்திரம் சிவப்பு ஒளியை அதிகம் வெளியிடுவதனால் இதனைத் தொலைக்காட்டியால் அவதானிப்பது மிகவும் கடினமாகின்றது. சிவப்புக் கதிர்கள் தொலைகாட்டியில் இருக்கின்ற அரியங்களில் பட்டு முறிவடைவதால், இந்தச் சிறிய கிரகத்தின் படம் ஒன்று மங்கலாகத் தெரிவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். ஆனால், இங்கே காணப்படுகின்ற நீர் மற்றும் தரைத தோற்றப் படைகளை ஆராய்ந்தபோது, இங்கே வெப்ப அதிகரிப்பு இருப்பதாகவும், இது யுபிற்றர் இனை ஒத்தகால நிலை கொண்டதாகவும் கூறப்படுகின்றது.

# எமது தமிழ் மாணவர்களின் கல்வியை அரசாங்கம் திட்டமிட்டு நசுக்குகின்றது

## - கல்விக்கழக பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

அரசாங்கம் எமது தமிழர்களின் கல்வியை எப்படி திட்டமிட்டு நசுக்குவதற்காக முயன்று கொண்டிருக்கின்றதோ, அதேபோல்தான் கணினி அறிவையும் எமது மாணவர்களுக்கும், மக்களுக்கும் கிடைக்கப்பெறாமல் செய்வதிலே கண்ணும் கருத்துமாக இருந்துவருகின்றது என தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரால் நடத்தப்பட்ட கணினிப் பயிற்சியை முடித்து வெளியேறிய மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே கல்விக் கழகப் பொறுபபாளர் வெ.இளங்குமரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்-

கணினிப் பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்கவேண்டும். எமது பகுதியிலுள்ள மாணவர்கள் மட்டுமல்ல, இந்த வாய்ப்பைப் பெறுவதற்கு ஆர்வதோடு இருக்கின்ற பெரியோர்களுக்கும் இந்தப் பயிற்சிநெறியை வழங்கவேண்டும் என்ற எண்ணம் செஞ்சிலுவைச் சங்கத்துக்கு மிகநீண்ட காலமாக இருந்து வந்தது.

இந்தக் கணினிப் பயிற்சியோடு தொடர்புடைய செய்தித் தொடர்பாடல், தகவல் தொழில்நுட்பம் பாடசாலைகளிலே, பாடசாலைப் பாடத் திட்டங்களிலே இடம்பிடித்தும்கூட- எமது பிரதேசத்துக்கு இந்தப் பயிற்சியை வழங்க அரசாங்கம் முன்வரவில்லை. இது ஒரு திட்டமிட்ட புறக்கணிப்பே எனக் கூறலாம்.

இந்தக் கணினிக் கல்வியை கூட எமது மாணவருக்கு கிடைக்காத வகையிலே பல புறக்கணிப்புக்களை அரசாங்கம் செய்து வருகின்றது. எடுத்துக் காட்டாக கல்விப் பொதுத் தரா தர சாதாரண, உயர்தர பாடத் திட்டங்களிலே தொழில்நுட்பத்துக்கான பாடநெறியாக தகவல் தொழில்நுட்பம் இருந்தபோதும்கூட, எமது பிரதேசத்துக்கு வழங்காத நிலை காணப்படுகின்றது.

ஏறத்தாழ 300 பாடசாலைகள் உள்ள இந்தப் பிரதேசத்தில் 11 கணினிகளையே அரசு வழங்கியுள்ளது. அதுவும் இந்தப் பிரதேசத்திலே மின்சாரம் இல்லை என்று தெரிந்தும் கூட, கணினிகளை வழங்கிய கல்வி அமைச்சு இந்த கணினிகளை இயக்குவதற்காக மின்பிறப்பாக்கிகளை வழங்கவில்லை.

இந்தப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளிலே ஆர்வமுள்ளவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகளின் உதவியோடு கணினிகள் இயக்கப்படுகின்ற நிலையைக்காணுகின்றோம்.

அரசாங்கம் எமது தமிழர்களின் கல்வியை திட்டமிட்டு நசுக்குவதற்காக முயன்று கொண்டிருக்கின்றதோ, அதேபோல்தான், எமது கணினி அறிவையும் எமது மாணவர்களுக்கும், எமது பகுதி மக்களுக்கு கிடைகாமல் செய்வதிலே கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்ற நிலையிலேயே, பாடசாலைகளிலே மாணவருக்கு கணினி அறிவை வழங்க வேண்டிய நிலையை அரசு புறக்கணித்து வருகின்றது.

அரசின் நிலைப்பாட்டுக்கு ஈடாக இந்தப் பிரதேசத்தில் ஆர்வமுள்ள பல நிறுவனங்கள் உதவியை வழங்குவதாலேயே, பல முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே வன்னி ரெக் போன்ற நிறுவனங்கள், பயிற்சிகளை வழங்குவதுடன் மாணவர்களுக்கு ஊடாக பாடசாலைகளில் கணினி நிறுவனங்களை நிறுவி அதற்கான பயிற்சிகளை வழங்கி வருவதை காணலாம்.

இந்தக் கணினிப் பயிற்சிநெறியை கிளிநொச்சி மாவட்டத்தில் மிக நீண்டகாலத்துக்கு முன்பே, மாணவர்களுக்கு இலவசமாக வழங்குகின்ற பணியை கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கம்தான் செய்துள்ளது.

இடப்பெயர்வோடு பல்வேறு இடங்களிலே மாறி மாறி இயங்கிய நிலையிலும், தொடர்ச்சியாக இந்த பயிற்சியை தொடர்வதற்கான நடவடிக்கையை செஞ்சிலுவைச்சங்கம் மேற்கொண்டுவந்தது. அந்த செயற்பாட்டை பாராட்டாமல் இருக்கமுடியாது.

கல்வியோடு தொடர்புடைய பல்வேறு தேவைகளுக்கு செஞ்சிலுவைச்சங்கம் உதவி வந்திருக்கின்றது. இப்போது மட்டும், மிக நெருக்கடியான காலகட்டத்திலும் கூட கல்வியில் தொய்வு ஏற்படாத வகையில் பல்வேறு வகையான கல்விச் செயற்பாடுகளுககு உதவியுள்ளது என்பதை இன்று எவரும் மறந்துவிட முடியாது.

இன்றைய அமைதிச்சூழநிலையில்தான் இந்தப் பிரதேசத்துக்கு கணினி அறிவைப் பெறக்கூடிய செயற்பாடுகளை மேற்கொண்டால்தான், இதனைப் பெறமுடியும்.

நெருக்கடியான காலகட்டத்திலே எமது கல்விச் செயற்பாடுகளுக்கு முழுமையாக ஆதரவை வழங்கி வந்த இந்த நிறுவனத்தை கல்விக் கழகப் பொறுப்பாளர் என்ற வகையில் பாராட்டுகிறேன். தனிய கல்விச் செயற்பாடு மட்டுமல்ல. இந்த பிரதேசத்து மாணவர்களின் செயற்பாடு. இந்தப் பிரதேச மக்கள் பல்வேறு இன்னல்களின் மேலும் செஞ்சிலுவைச் சங்கம் ஆற்றிய பணி மறக்கமுடியாது.

அரசின் பல்வேறு புறக்கணிப்புகளுக்கிடையே செஞ்சிலுவைச் சங்கம் பல்வேறு புனர்வாழ்வு தொடாபான வேலைப் பணிகள், மருத்துவப் பணிகளை எமது கிராமப்புற மக்களுக்கு எடுத்துச் செல்கின்ற முயற்சியிலே ஈடுபட்டதை நாங்கள் மறந்து விடமுடியாது.

இதுபோன்று மக்கள் நலன்களில் அக்கறை கொண்டு-பல்வேறு செயறபாடுகளை வளர்த்து மக்களிடையே கொண்டு சென்று, இந்த மாவட்ட மக்களுக்கு பெரும் பங்காற்ற வேண்டும் என்ற வகையிலே கிளிநொச்சி செஞ்சிலுவைச்சங்கக் கிளை வளர வேண்டும். இந்த நிறுவனத்தினால் நல்ல நோக்கோடு கற்பிக்கப்படுகின்ற இந்தப் பாடநெறியில் பங்குபற்றுபவர்கள் உங்களுடைய எதிர்காலத்தை மாவட்டத்தின் வளர்ச்சிக்கு பயன்படுத்தப்படவேண்டும். அதுமட்டுமல்ல உங்கள் பயிற்சிநெறி ஒரு அடிப்படைப் பயிற்சிநெறி. தொடர்ந்து மேலதிக தேவைகளை தேடி உங்களையும் வளர்த்து. இந்த மாவட்டத்தையும் வளர்த்தெடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.




## திறப்புவிழா

(சேமமடு)

சேமமடு விபுலானந்தர் முன்பள்ளி புதிய கட்டடத் திறப்புவிழா எதிர்வரும் 22 ஆம் திகதி புதன் கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முன்பள்ளிச் சிறார்கள், பெற்றோர்களைக் கலந்து சிறப்பிக்குமாறு திறப்புவிழா ஏற்பாட்டுக்குக்குழுவினர் கேட்டுள்ளனர்.

இந்த முன்பள்ளி டெனிஸ் அகதிகள் பேரவையின் நிதியுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்மொழி பேசக்கூடிய பொலிஸாரை நியமியுங்கள்

## - பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை

மன்னார் மாவட்டத்தில் தமிழ் மொழிபேசக் கூடிய பொலிஸாரை நியமிக்குமாறு மன்னார் மறை மாவட்ட ஆயர் வண.இராயப்பு ஜோசெப் ஆண்டகை பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். மன்னார் மாவட்டத்துக்கான விஜயத்தை மேற்கொண்ட பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வா, மன்னார் மறை மாவட்ட ஆயரைச் சந்தித்து உரையாடிய போதே, அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இந்தச் சந்திப்பின் போது அரசிற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர், இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் பெருமளவிலான போதைப் பொருட்கள் கடத்துப்பட்டுவருகிறது. இதனைக் கட்டுப்படுத்துவதற்காக விசேடபோதைவஸ்து கட்டுப்பாட்டு பொலிஸ்பிரிவு ஒன்றை மன்னாரில் அமைக்கவேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும், தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த வருடம் போதைவஸ்துப் பொருட்பாவனையை மன்னார் மாவட்டத்தில் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகளையும் ஆயர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், மன்னார் மாவட்டத்திலுள்ள பெரும்பாலான பொலிஸாருக்கு தமிழ்மொழி தெரியாமையால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் ஆயர் குறிப்பிட்டார்.

# வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் 10 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளுடன் போட்டியிட்டு, அகில இலங்கையில் மூன்றாமிடத்தை பெற்றுக்கொண்டதை பாராட்டும் வகையில் பாராட்டுவிழா கடந்த செவ்வாய்க் கிழமை மாலை 4 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் விழா ஒன்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வெற்றியீட்டிய மாணவர்கள் இராமநாதபுரம் சந்தையிலிருந்து பாண்ட் வாத்தியங்கள் சகிதம் அழைத்து வரப்பட்டனர்.

இந்த நிகழ்வில் தலைமையுரையை மா.அகிலநாயகம் நிகழ்த்தினார். வரவேற்புரையை பாடசாலை உபஅதிபர் க.முத்துலிங்கம் நிகழ்த்தினார்.

அடுத்து வட்டக்கச்சி காவல் துறைப் பொறுப்பாளர் சுந்தர் வெற்றியீட்டிய மாணவர்களை வாழ்த்தி, பாராட்டுரை வழங்கினார். இதில் உரையாற்றிய சேவைக் கால ஆலோசகர் தனராஜ் தொடர்ந்து இந்தப் பாடசாலை மாணவர்கள் பல சாதனைகளைச் செய்து வருகின்றனர். இந்த மாணவர்களின் திறமை ஆசிரியரின் அயராத உழைப்பால் கிடைத்த வெகுமதி என்றே கூறலாம். தொடர்ந்து வரும் போட்டிகளிலும் மாணவர்கள் வெற்றி ஈட்ட வேண்டும் என வாழ்த்தி தனது உரையை நிறைவு செய்தார்.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர் சி.பாலகிருஸ்ணன் உரை நிகழ்த்துகையில்- அகில இலங்கை ரீதியான போட்டி, பாடசாலைகளுக்கிடையிலான போட்டி என்றும் எமது பாடசாலை மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் நிறைய அனுபவம் உண்டு. 13 - 19 வயதுக்கிடைப்பட்ட 30 மாணவிகள் இந்தப் போட்டியில் கலந்து கொண்டனர். இவர்கள் 8000 இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களை உடைய றோயல் கல்லூரியை போட்டியில் வென்றமையும் குறிப்பிடத்தக்கது.

காலம் காலமாக வெற்றியீட்டி சாதனைகளை முறியடித்த எமது பாடசாலை மாணவிகளின் சாதனை மிகவும் பாராட்டுதற்குரியது. அத்துடன் பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்களையும் பாராட்டுக்குரியவர்கள் என மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் நன்றி உரையைப் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் இராசேந்திரம் நிகழ்த்தினார்.

இந்தப் பாடசாலை 2002 ஆம் ஆண்டில் உடற்பயிற்சிப் போட்டியில் பங்குபற்றி அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டதுடன், வடக்கு - கிழக்கு மாகாண மட்டப் போட்டிகளில் மூன்று மாணவர்கள் வெற்றியீட்டியதும் குறிப்பிடத்தக்கது.

(9)

# திலீபன் நினைவுநாள் வட்டக்கச்சியில் அனுஷ்டிப்பு

உண்ணாநோன்பிருந்து தன்னுயிரை தியாகம் செய்த தியாகி லெப்.கேணல் திலீபனின் 17 ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் வட்டக்கச்சியில் உணர்வு பூர்வமாக இடம்பெற்று வருகிறன.

வட்டக்கச்சி வீதிகள் எங்கும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப் பட்டு, பந்தல்கள் அமைத்து தியாக தீபம் லெப்.கேணல் திலீபன் திருவுருவப்படத்துக்கு மக்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

கடந்த 15 ஆம் திகதி வட்டக்கச்சி மாவீரர் மண்டபத்தில் காலை 9.55 மணியளவில் அரசியற்துறையைச சேர்ந்த இராமஜெயம் தலைமையில் நினைவு நாள் நிகழ்வுகள் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை வட்டக்கச்சி, இராமநாதபுரம் வர்த்தக சங்கத் தலைவர் சிவலோகநாதன், வட்டக்கச்சி அறிவு அமுது புத்தக சாலை விற்பனை முகாமையாளர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தேசியக் கொடியை வட்டக்கச்சி பிரதேசப் பொறுப்பாளர் சோழநிலவன் ஏற்றிவைத்தார். தியாகி திலீபனின் திருவுருவப்படத்துக்கான ஈகச் சுடரை வட்டக்கச்சி வர்த்தக சங்கச் செயலாளர் சர்வன் ஏற்றிவைத்தார். வர்த்தகர் சிறி மலர்மாலை அணிவித்தார்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து தலைமையுரையை இராமஜெயம் நிகழ்த்தினார். நினைவுரையை லோறன்ஸ் நிகழ்த்தினார். தொடர்ந்து இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை மாணவி பி.கிருஸ்ணகுமாரியின் கவிதையும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர்.. (9)

# வீதி புனரமைப்பின் ஸ்தம்பித நிலையால் பயணம் செய்யும் மக்கள் பெரும் கஷ்டம்

கிளிநொச்சி - ஸ்கந்தபுரம் சந்தைப்பகுதியிலுள்ள பிரதான வீதிகள் இரண்டு பக்கங்களும் முறையாகப் புனரமைப்புச் செய்யப்படாததால் பொதுமக்கள் பலத்த சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

சந்தைப் பகுதி - பிரதான வீதியில் அமைந்துள்ள கடைகள் வீதி ஒழுங்கிற்கமைவாக அமைக்கப்படவில்லை. இதனால் இந்த வீதியில் 250 மீற்றர் நீளமான பகுதிக்கு வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் ஒரு பக்கம் மட்டுமே கால்வாய்கள் வெட்டப்பட்டு வருகின்றது.

இந்த வீதியின் புனர் நிர்மாணப் பணியை நிறுத்திவிடாமல் மறு பக்கத்தையும் புனரமைக்க வேண்டுமென அண்மையில் நடைபெற்ற அத்தியாவசிய சேவைகள். கூட்டத்தில் அரச அதிபருக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இதற்கமைய அரச அதிபரால் வீதி அபிவிருத்தித் திணைக்கள பொறியிலாளருக்கு எடுத்துரைக்கப்பட்ட போதும், இதுவரையில் புனரமைப்பு வேலைகள் நடைபெறவில்லை.

இந்த வீதியால் முகமாலை, மல்லாவி, புதுக்குடியிருப்பு, முழங்காவில், வன்னேரி போன்ற இடங்களுக்கு 10 வரையான பேரூந்துகள் பயணங்களை மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது.

இந்த வீதிகள் சரியான முறையில செப்பனிடப்படாமலுள்ளதால பயணிகள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (ஸ்ரீ)

# அக்கராயன் வைத்தியசாலையில் 6 ஆயிரத்து 305 பேருக்கு சிகிச்சை

அக்கராயன் பிரதேச அரசினர் வைத்தியசாலையில் கடந்த இரு மாதங்களில் வெளிநோயாளர்கள் பிரிவில் 6 ஆயிரத்து 305 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதில் ஜூலை மாதத்தில் சாதாரண காய்ச்சல் காரணமாக 229 பேரும், மலேரியா காய்ச்சலினால் 49 பேரும், வயிற்றோட்டத்தால் 43 பேரும், நாய்க்கடியால் 4 பேரும், தொற்றுநோயால் 63 பேரும், விபததுக்களால் 347 பேருமாக மொத்தம் 2 ஆயிரத்து 689 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் சாதாரண காய்ச்சல் காரணமாக 222 பேரும். மலேரியா காய்ச்சல் காரணமாக 136 பேரும், வயிற்றோட்டத்தால் 27 பேரும், நாய்க்கடியால் 4 பேரும், தொற்றுநோயால் 57 பேரும், விபத்தால் 341 பேருமாக 3 ஆயிரத்து 616 பேர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்*
*மற்றைய எல்லாம் பிற.*

திருக்குறள்

# நமது நோக்கு

## உறுதியற்ற கொள்கையுடைய அரசு உருவாக்கப் போகும் வரவு செலவுத் திட்டம்

எதிர்வரும் நவம்பர் மாதம் பத்தாம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவிருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் முதலாவது வரவு செலவுத் திட்ட யோசனைகள் மேலும் பத்து நாட்கள்வரை பின்தள்ளியே சமர்ப்பிக்கப்படும் என்று தெரியவந்துள்ளது.

சமாதான முயற்சிகளின் எதிர்காலம் தொடர்ந்தும் கேள்விக் குறியாகவே இருக்கும் சூழலில், மீண்டும் போர் மூளும் அபாயம் குறித்த அச்சமூட்டும் சமிக்ஞைகளும் வெளிவரத் தொடங்கியுள்ள நிலையில் - சரிவுநிலையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியும், வாயு வேகமோ மனோ வேகமோ என்னும் நிலையில் அன்றாடம் அதிகரித்துச் செல்லும் விலைவாசியுயர்வும் - சாதாரண மக்களை வாழ்வோடு போராடி, போராடித் தோற்று விரக்தியுறும் நிலைக்குத் தள்ளிக் கொண்டே போகிறது.

எரிபொருளின் விலை நாளுக்குநாள் ஏறிக்கொண்டே போகிறது. எரிவாயு விலை, மின் கட்டணம், பஸ் போக்குவரத்துக கட்டணம் என மனிதனின் அன்றாட வாழ்வியக்கத்துக்கு அவசியமான அனைத்துமே இரவில் தூங்கிப் பகலில் விழிக்கும் நேரப் பொழுதுக்குள் உயர்ந்துவிடுகின்றது.

அதிகாலை விழிப்பு விலையுயர்வு பற்றிய செய்தியுடன் ஏற்படுவதென்பது இயல்பானதொன்றாகிவிட்டது.

தென்பகுதியில் பாமரமக்களின் - ஏழைகளின் - தேசிய உணவாகக் கருதப்படும் பாணின் விலைகூட ஒரேநாளில் மூன்று ரூபாவால் அதிகரித்துள்ளது.

எல்லாவற்றிற்கும் வழமைபோல், உலக சந்தையில் விலையுயர்வு ஏற்பட்டுவிட்டது என்பது காரணமாகக் கூறி நியாயப் படுத்தப்படுகிறது.

எல்லா வகையிலும் ஒடுக்கப்படும் ஏழை மக்கள் எல்லாவற்றையும் மௌனமாக ஜீரணித்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை ஆட்சியில் உள்ளோர்க்கு - அதிகாரத்தில் வீற்றிருப்பவர்க்கு எப்போதுமே உண்டு.

ஏழையின் குரல் எப்போதுமே அதிகார வர்க்கத்தினரால் நிர்த்தாட்சண்யமாக ஒடுக்கப்படவே செய்கிறது.

ஆளும் வர்க்கம் விடும் வரலாற்றுத் தவறுகளின் தாக்கம் அப்பாவி மக்களையே பெரிதும் பாதிப்புற வைக்கிறது.

அரசின் திறைசேரி - கடனால் நிரப்பப்படவேண்டிய ஒன்றாகவே மாறிவிட்ட நிலையிலும், தேசத்தின் வருவாய் தேய்ந்து கொண்டே போகும் சூழலிலும், வரவை மீறிய செலவு ஏற்படுவதென்பதைத் தவிர்க்கவே முடியாத நிலைதான் தொடர்கதையாகப் போகின்றது. பல தசாப்த காலப் போருக்குப் பின்னர், அழிவுகளின் எச்சங்களிலிருந்து மீண்டும் ஒரு புதிய வாழ்வை நம்பிக்கையுடன் ஆரம்பிக்கும் முனைப்புடன் புத்துயிர்ப்புக் கொள்ள எழுகையில், தொலை நோக்குச் சிந்தனையும், தேசிய வளர்ச்சி மீதான அக்கறையுமற்ற இலங்கையின் ஆட்சிப்பீடத்தவர்களும், ஏனைய அரசியல் தலைமைகள் மற்றும் பேரினவாதிகளும் - சமாதான சூழலால் ஏற்படக்கூடிய சர்வதேச ரீதியிலான அனுகூலங்களை பொறுப்புணர்வுடன் பயன்படுத்திக் கொள்ளத் தவறியமை காரணமாக மீண்டும் ஓர் பின்னடைவு நிலைக்கே செல்ல வேண்டிய அவல நிலை தோன்றியுள்ளது.

சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் அரசின் நேர்மையற்ற தந்திரோபாயச் செயற்பாடுகள் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களின் எதிரொலியாக - இலங்கைக்கு வழங்கவென சர்வதேச சமூகம் உறுதியளித்த நிதியைக்கூட பெற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது.

விலைவாசி ஏற்றம், பொருளாதார வீழ்ச்சி, நிதிப்பற்றாக் குறை, சமாதான முயற்சிகளில் தேக்கம் எனப் பலவகையிலும் இலங்கையின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் பாதகமான அம்சங்களே இந்த நாட்டைச் சுற்றிவளைத்துள்ள போதிலும் அரசின் உள்நோக்கம் மீண்டும் ஓர் பேரழிவை உண்டு பண்ணும் போரைத் தொடரும் இலக்கினைக் கொண்டதாகவே உள்ளது எனலாம்.

ஆயுதக் கொள்வனவு, போர்க்கப்பல் மற்றும் யுத்தவிமானக் கொள்வனவு, படைபலத்தை அதிகரித்தல், பாதுகாப்பு உடன்பாடுகளை மேற்கொள்ளுதல் எனப் பேயாய் அலையும் அரசு சமாதான முன்னெடுப்புக்களில் ஆர்வத்துடன் செயற்படுவதாக இல்லை.

இதுவே இன்றைய சகலவிதமான நெருக்கடிகளுக்கும், பொருளாதாரப் பின்னடைவுக்கும், மக்களின் வாழ்வியல் துயரங்களுக்கும் பிரதான காரணமாகும்.

இந்த நிலையில் - வரவு செலவுத் திட்டமொன்றினை சமர்ப்பித்தே ஆகவேண்டிய நிலையில் அரசு எத்தகைய தன்மை கொண்ட வரவு செலவுத் திட்ட யோசனைகளை உருவாக்கி முன்வைக்கப் போகின்றதென்பதே இன்றைய வினாவாகும்.

இடர்கால வரவு செலவுத் திட்டத்தையா, சமாதான கால அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட வரவு செலவுத் திட்டத்தையா, மீண்டும் பாதுகாப்புத் துறைக்கு முன்னுரிமை வழங்கப் போகும் வரவு செலவுத் திட்டத்தையா அல்லது மக்களை ஏமாற்றி, அவர்கள் மீது பின்னர் மெல்ல மெல்ல சுமைகளை ஏற்றும் வரவு செலவுத் திட்டத்தையா, அரசு முன்வைக்கப் போகிறது !

இதுவே இப்போதுள்ள கேள்வியாகும்.

எதுவானாலும் வெளிநாட்டுக் கடனுதவியை மட்டும் நம்பியே இலங்கையின் வரவு செலவுத் திட்டம் உருவாக்கப்படும் அவலம்தான் தொடரப் போகிறது.

அது இந்த நாட்டிற்கும் அதன் எதிர்கால நன்மைக்கும் உகந்தாக இருக்கப் போவதில்லை என்பது மட்டும் உண்மையாகும்.

## நாடும் நடப்பும்




# நாட்டுக்கூத்து போட்டியை தேசிய மட்டத்திலும் நடத்த ஆலோசனை

## தமிழ்ப் பிரிவு கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

மாணவர்கள் தமிழ்மொழியின் திறன்களை அறிந்திருக்க வேண்டும். திறன்களை அறிவதாலேயே மொழியின் பண்பாடு நிலைக்கும். தமிழ் சார்ந்த திருகோணமலை நகரத்தில் தமிழ் மொழிக்கு விழா எடுப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. தமிழ் மொழித்தின போட்டிகளில் தேசிய மட்டத்தில் கலந்துகொள்ளும் சகல மாணவர்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ்களும், கேடயங்களும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை மத்திய கல்வி அமைச்சு மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறு மத்திய கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் பிரிவுக்கான கல்விப் பணிப்பாளர் ந.நடராசா தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வித்திணைக்களம் நடத்திய நாட்டுக்கூத்து விழா, கடந்த சனிக்கிழமை திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் நடைபெற்றது இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில்-

புதிய கல்வித்திட்டங்களுக்கு அமைவாக ஏற்படும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துவருகின்றது. வடக்கு - கிழக்கு மாகாணம் பரிபூரண நிலையில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களை மிகவும் ஒற்றுமையுடன் இணைத்து தமிழ் மொழியை வளர்த்து வருகின்றார்கள்.

போட்டிகளை நடத்துவது மாணவர்களை நீக்குவதற்காக அல்ல. அவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்காகவே. நாட்டுக்கூத்தை தேசிய மட்டத்தில் போட்டியாக நடத்துவது பற்றி ஆலோசிக்கப்பட்டுவருகிறது. ஒவ்வொரு இடத்திலும் வெவ்வேறு விதமான கூத்து பின்பற்றப் படுவதால், போட்டிக்கு அதனை ஒருமுகப்படுத்த முடியாத நிலைமை காணப்படுகின்றது. அடுத்த வருடம் நடத்தப்படும் தேசிய மட்ட தமிழ் மொழித்தின போட்டிகளில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நடத்தப்படும் மாகாணமட்ட நாட்டுக் கூத்து போட்டிகளில் வெற்றிபெறுவோர் அழைக்கப்பட்டு அவர்களை கௌரவிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

திருக்குறளில் இல்லாதது எதுவும் இல்லை. சகல திறன்களும் கற்கத்தக்க விதத்தில் திருக்குறள் அமைந்துள்ளது. திருக்குறளையும் போட்டியாக நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. எமது பண்பாடு, மொழி அழியாத வகையில் பாதுகாக்கப்படவேண்டும். இதற்காக திருக்குறளும், போட்டியில் இணைக்கப்படவுள்ளது.

தமிழ்மொழித்தினப் போட்டிகள் அகில இலங்கை மட்டத்தில் நடத்தப்படுவதுடன் நிறுத்தப்படாது, அகில உலக ரீதியிலும் நடத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்த விழாவுக்கு தலைமை வகித்து உரையாற்றிய வடக்கு - கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் தி.பொன்னம்பலம் அங்கு உரையாற்றுகையில் -

கலையும், பண்பாடும் ஒரு இனத்தின் தனித்துவத்தை வெளிப்படுத்துவனவாக இருக்கின்றது. கலாசாரப் பண்பே எம்மை வேறினத்திலிருந்து வேறுபடுத்துகிறது. முத்தமிழையும், எடுத்துச்சொல்லும் வேலையைக் குறிப்பாக நாடகத்துடன் தொடர்புபட்ட நாட்டுக்கூத்து தனித்துவ இடத்தைப்பெற முக்கிய காரணமாக அமைகின்றது. ஆரம்பத்தில் தெய்வீக கலையாக மாற்றம்பெற்று விளங்குகின்றது. இதிகாச கதைகளை எமது மூதாதையர்கள் அடுத்த தலைமுறைக்கு சொல்லும் பண்பாக இந்தக்கூத்துக்கள் விளங்கியிருக்கின்றன. எனவும் தெரிவித்தார். (04)

## தீவக கடற்றொழிலாளர்களுக்கு மூன்று மில்லியன் ரூபா கடனுதவி

(யாழ்ப்பாணம்)

தீவக கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு, உலக உணவு விவசாய ஸ்தாபனம் மூன்று மில்லியன் ரூபாவை கடனாக வழங்கியுள்ளது.

இந்த நிதியை தீவக கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் அங்கம் வகிக்கும் கடற்றொழிலாளர் சங்கங்களுக்கு சுழற்சிமுறைக் கடனடிப்படையில் வழங்கவுள்ளது.

அந்தப் பணத்தைக்கொண்டு தீவகத்தைச் சேர்ந்த மீனவர் சங்கங்கள் தமது பிரதேசத்தில் வாழும் வறிய மீனவர் குடும்பங்களுக்கு, தொழில் முயற்சிக்கான கடன் திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்தில் விவசாயிகளுக்கும், கடற்றொழிலாளர்களுக்கும் இவ்வாறான நிதி உதவிகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (21)

## போரூட் நிறுவனத்தின் உதவியுடன் தாய் சேய் நலன் திட்டம் ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் போரூட் நிறுவனம் தாய் சேய் நலத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது.

யாழ். குடாநாட்டில் தற்போது தாய், சேய் நலம் மற்றும் அவர்களுக்கு வழங்குவதற்குத் தேவையான வைத்திய சுகாதார ஆலோசனைகளை வழங்குவதற்கு ஏற்ற மருத்துவ மாதுகள், சுகாதார ஆலோசகர்கள் போன்றோர் பற்றாக் குறையாகக் காணப்படுதல். தாய், சேய் நலன் சம்மந்தமான விடயங்களில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகளைக் கவனத்திற் கொண்டே இந்தத் திட்டத்தைப் போரூட் நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் - பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகள் ஆகியோரின் போஷாக்கை அதிகரித்துள்ளதுடன், இலவச வைத்திய ஆலோசனைகளையும், கருத்தரங்குகளையும் போரூட் நடாத்தி வருகின்றது. (17)

## தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவ அரசாங்கம் தீர்மானம் !

(கொழும்பு)

நாட்டில் தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவ அனுமதி வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக, கொழும்பு தகவல்கள் தெரிவித்தன.

இதன்படி, எதிர்வரும் காலத்தில் நாட்டில் தனியார் பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்கப்படவேண்டுமென நீண்டகாலமாகக் கலந்துரையாடல்கள் நடைபெற்று வந்ததோடு, அவற்றுக்கு ஜே.வி.பியின் மாணவர் அமைப்புக்கள் கடுமையான எதிர்ப்புக்களைக் காட்டிவந்தமையும் குறிப்பிடத்தக்கது. (தே)

## நாகர்கோவில் மகா வித்தியாலயத்தை இடம்மாற்றுமாறு கோரிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கிராமக்கோட்டுச் சந்திக்கு அண்மையில் இயங்கிவரும் நாகர்கோவில் மகாவித்தியாலயத்தை, கற்கோவளம் ஆனைவிழுந்தான் பகுதியில் இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பாடசாலையில் கல்விகற்றுவரும் பெரும்பாலான மாணவர்கள் கற்கோவளம் புனித நகர் முகாமிலேயே வசித்து வருகின்றனர். இந்த முகாமில் இருந்து பல மைல் தூரத்திலேயே தற்போது பாடசாலை இயங்கிவருகின்றது.

போக்குவரத்து வசதி இன்மை காரணமாக பல மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருக்கின்றனர். பல மாணவர்கள் வசதியின்மை காரணமாக பாடசாலையைவிட்டு இடைவிலகுவதாகவும் தெரி விக்கப் படுகின்றது.

எனவே இந்த மாணவர்களின் நன்மை கருதி இந்தப் பாடசாலையை இந்த முகாமுக்கு அண்மித்த பிரதேசத்தில் இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (122)

## வாரநோக்கு

**யாழவன்**

# என்னதான் நடக்கும் நடக்கட்டுமே! ஒரு தலைவன் இருக்கிறான் வருந்தாதே!

இந்தியக் கடற்படை தளபதி இலங்கை வருகை! இலங்கை கடற்படைத் தளபதி முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரியாக பதவியேற்பு! இந்தியாவிடமிருந்து இன்னுமொரு போர்க்கப்பலை பெற்றுக் கொள்ள இலங்கை அரசு முடிவு! இலங்கை, இந்திய கடற்பரப்புக்களில் இரு நாட்டுப் படைகளும் இணைந்து, கண்காணிப்புப் பணியில் ஈடுபடமுடிவு! இலங்கை கடற்படைக்கு வேண்டிய சகல உதவிகளையும், ஆலோசனைகளையும் இந்தியக் கடற்படை வழங்குவதற்கு இணக்கம்!

இவை கடந்தவாரம் நடைபெற்ற சில சம்பவங்களும் அவற்றின் பின்னாக வெளிவந்த சில பிரமுகர்களின் கருத்துக்களுமாகும். இவை அனைத்தும் ஒன்றிணைந்து ஒரே மூச்சில் படித்துப்பார்த்தால் மீண்டும் அரசு போருக்கு தயாராகிறது என்பது, எந்தக் குழந்தைக்கும் புரியும் விடயம். கடந்த வாரம் சமாதானப் பாதையை நோக்கிய நகர்வுகளும், போர் நோக்கிய நகர்வுகளும் சமாந்தரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. எதன் மூச்சு அதிகமாகவுள்ளதோ, அந்த வழிக்கு நாடு இழுத்துச் செல்லப்படும்.

நோர்வேயின் விசேட சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், கடந்த வாரம் இலங்கை வந்து ஜனாதிபதி, பிரதமர், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர், பொது மக்களின் பிரதிநிதிகள் எனப் பலரையும் சந்தித்து நாடு திரும்பி யிருக்கிறார்.

சொல்ஹெய்மை சந்தித்த அனைவருமே சமாதானப் பாதை தற்போது அதலபாதாளத்துக்குள் சென்று கொண்டிருப்பதையே சுட்டிக் காட்டியுள்ளனர். அதிலும், பொது மக்கள் பிர திநிதிகள் மீண்டுமொரு போர் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகரித்து வருவதாகவும், அரசு சமாதானம் மீது நம்பிக்கையற்று செயற்படுவதாகவும் கருத்து வெளியிட்டுள்ளதுடன், போர் பற்றிய தமது அச்சவுணர்வையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் தென்னிலங்கையைச் சேர்ந்த பௌத்த துறவிகள் பலரும், ஊடகவியலாளர்கள் பலரும், யாழ்ப்பாணம் வந்து



தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் உட்பட பலரையும் சந்தித்துச் சென்றுள்ளனர். இவர்கள் தமது சந்திப்புக்களின்போது, பல முக்கியமான உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால் பேச்சளவில் வெளிப்பட்டுள்ள இந்த உண்மைகளை தமது செயல் மூலம் நியாயப்படுத்த வேண்டியது, இந்தக் கருத் துக்களுக்கு சொந்தக்காரர்களுக்குரிய கடமை.

அதிலும் யாழ்ப்பாணம் வந்த பௌத்த துறவிகள் குழுவுக்கு தலைமை வகித்து வந்த வணக்கத்திற்குரிய தேரர் 'பௌத்த துறவிகள் எல்லோரும் இனவாதிகள் அல்லர், ஒரு சிலர் தமது அரசியலுக்காக இனவாத போக்குடைய பௌத்த துறவிகளை தவறான வழியிலே பாவிப்பதனால், பௌத்த துறவிகள் அனைவருமே இனவாதிகள் எனும் பட்டம் தமிழ் மக்கள் மனங்களிலே நிலையாக பதிந்து விட்டது. ஆனால், அது உண்மையல்ல. அனேகமான பௌத்த துறவிகள் சமாதான த்தையே விரும்புகிறார்கள். இன ஐக்கியத்தையே அவர்கள் வரவேற்கிறார்கள் என்றெல்லாம் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இவரது கருத்து வெறும் நாவிலிருந்து அல்லாமல், உள்ளத்திலிருந்து வெளிப்பட்டதாக இருந்தால், அது மகிழ்ச்சிக்குரியதே. ஆனால், அது உண்மையென்பதை நிரூபிக்கத்தக்க வகையிலே இனவாத சிந்தனையற்ற, சமாதானத்தையும், இன ஐக்கியத்தையும் விரும்பும் பௌத்த துறவிகள் ஏதாவது உருப்படியாக செய்தேயாகவேண்டும்.

சமாதானத்துக்கு எதிரான பிக்குகளின் கோசங்கள், தென்னிலங்கையிலே வலுப்பெற்று வரும் இந்த வேளையில், சமாதானத்து க்கு ஆதரவாகவும், பௌத்த துறவிகள்குரல் கொடுக்க முன்வரவேண்டும். சமாதான அனுசரணையாளர்களான நோர்வே நாட்டினரின் தேசியக் கொடியை எரித்து, வெறித்தனமாக எதிர்ப்பு கோசங்களை எழுப்பி, ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தி, இலங்கையொரு பௌத்த சிங்கள நாடு எனும் தப்பான வாதத்தை மீண்டும் மீண்டும் நிரூபிக்க முயலும், பௌத்த இனவாத துறவிகளின் மத்தியிலிருந்து, உண்மையான பௌத்த சிந்தனையுடைய துறவிகளின் குரல்களும் உரக்க எழவேண்டும். அதன் மூலமாகவேனும் நாடு விமோசனம் அடையவேண்டும்.

எனவே, குடாநாட்டுக்கு வந்த பௌத்த பிக்குகள் தென்னிலங்கை திரும்பியதும், தமது வலுவை முழுமையாகப் பிரயோகித்து, சிங்கள மக்களுள் பெரும்பான்மையானோரை ஒன்று திரட்டி சமாதான ஆதரவுப் பேரணிகளை நடத்தவேண்டும். ஜே.வி.பியினருக்கும் அவர்களது கருத்துகளுக்கும் எதிரான போர் ஒன்றை தொடங்கவேண்டும். அதன் மூலமாக உண்மையான 'தர்மராச்சியத்தை' பௌத்த துறவிகள் அமைக்கவேண்டும் இது நடக்குமா???!!!

இது இவ்வாறிருக்க இலங்கை விடயத்திலே இந்தியா கொண்டுள்ள அதீதமான அக்கறை அண்மைக்காலமாக நன்கு வெளிப்பட்டு வருகிறது. இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான நியாயமான தீர்வை அடைவதிலே இந்தியா காட்டும் கரிசனையானது, போர்க்கப் பல்களை இலங்கை கடற்படைக்கு அன்பளிப்பாக வழங்குவதிலிருந்து தெரிகிறது.

ஈழத்தமிழர்கள் விடயத்திலே மீண்டும் மீண்டும் தவறு இழைக்கும் இந்தியா, இன்னும் தன்னை திருத்திய பாடாகவேயில்லை. 1987 ஆம் ஆண்டு அமைதிப்படை எனும் பெயரிலே இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பி, ஈழத்தமிழர்கள் மீது அட்டூழியத்தைக்கட்ட விழ்த்துவிட்டு, தனது எஜமானத் தனத்தை ஆரம்பித்த இந்தியா- பின்நாளில் தியாகி திலீபனின் உயிரைப் பறித்ததுடன், துரோகத்தனத்தின் உச்சத்தை தொட்டது.

பின்னர் விடுதலைப் புலிகளை பகைத்துக்கொண்டு, புலிகளை அழிப்பதற்கு என இராணுவ நடவடிக்கைகளைத் தொடங்கிய இந்தியா, வெறும் அப்பாவிப் பொது மக்களை அழித்து தனது வரலாற்றில் இரத்தக் கறையை ஏற்படுத்தியதைத் தவிர, வேறு எதையுமே சாதிக்க முடியவில்லை. ஈற்றில் புலிகளை வெற்றிகொள்ள முடியாமல் தன் முகத்தில் தானே கரியைப் பூசிக்கொண்டு இலங்கையை விட்டு வெளியேறியது இந்திய இராணுவம்.

இதனால், ஏற்பட்ட அவமானத்தைப் பொறுக்க முடியாத இந்திய அரசுகள், ராஜீவ்காந்தி கொலையை காரணமாக வைத்து, ஈழத்தமிழர்கள் மேல், மேன்மேலும் தனது காழ்ப்புணர்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டது. புலிகளின் ஆதரவாளர்களையும், ஈழத்தமிழர்களுக்காக குரல் கொடுப்பவர்களையும் கைது செய்து சிறையில் அடைத்த தமிழக அரசு, மத்திய அரசு கண்டும் காணமல்விட்டது.

அத்துடன், 2000ஆம் ஆண்டு நடைபெற்ற ஓயாத அலைகள் III இராணுவ நடவடிக்கையில் போது, விடுதலைப்புலிகள் யாழ். குடாநாட்டை சுற்றி வளைத்து, அங்கிருந்த 40,000 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினரை நிராயுதபாணிகளாக குடாநாட்டை விட்டு விலகுவதற்கு சந்தர்ப்பத்தையும் கொடுத்திருந்தனர். இந்த நிலையில் செய்வதறியாது திகைத்து நின்ற இலங்கை ஜனாதிபதி, இந்தியாவிடம் மண்டியிட்டார். தானாகவே இது விடயத்திலே மூக்கை நுழைத்துக் கொண்ட இந்தியா, இராணுவ தளபாட உதவிகளை இலங்கை அரசுக்கு வழங்கியதுடன், ஆலோசனைகளையும் கொடுத்து விரத்தி நிலையிலிருந்த இலங்கை இராணுவத்தினரின் மானத்தை காத்தது டன், ஈழத் தமிழர் வரலாற்றிலே மீண்டுமொரு முறை இந் தியா தலை கவிழ்ந்து நின்றது.

> **இலங்கை விடயத்திலே இந்தியா கொண்டுள்ள அதீதமான அக்கறை அண்மைக்காலமாக நன்கு வெளிப்பட்டு வருகிறது. இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான -நியாயமான தீர்வை அடைவதிலே, இந்தியா காட்டும் கரிசனையானது, போர்க்கப்பல்களை இலங்கை கடற்படைக்கு அன்பளிப்பாக வழங்குவதிலிருந்து தெரிகிறது.**



இவை அனை த்தும் போதா தென்று, புலிகள் சமாதானம் மீது நம்பிக்கை கொண்டு அந்த வழிக்கு திரும்பியுள்ள இந்த வேளையில், இலங்கை அரசுக்கு போர்க்கப்பல்களை வழங்கியும், கடற்படைக்கு இராணுவ பயிற் சிகளை வழங்கியும், அவ்வப்போது இந்திய இராணுவ தளபதிகளும், பிராந்திய அதிகாரிகளும் இலங்கைக்கு வந்து பாதுகாப்பு நிலவரங்கள் தொடர்பாக ஆலோசனை கூறுவதும் அடிக்கடி நிகழும் நிகழ்வுகளாகி விட்டன.

ஊரிலே சொல்லுவார்கள் 'உதவி செய்யா விட்டாலும் பரவாயில்லை உபத்திரவம் செய்யாமலிருந்தாலே போதும்' என்று அந்த நிலையிலுள்ளது இன்று இந்தியா. இலங்கையின் சமாதான தீர்விலே உதவியை செய்யும் படி பலரும்கோரும் போதும், அதனை வழங்க முன் வராத இந்தியா, கடைசி சமாதானப் பாதைக்கு உபத்திரவத்தை தானும் கொடுக்காமலிருக்கலாமல்லவா? இதைவிடுத்து அமெரிக்காவுடன் போட்டி போட்டுக்கொண்டு சமாதானத்துக்கு குந்தகம் விளைவிக்கும் விதத்திலே இலங்கைக்கு போரியல் உதவிகளை வழங்குவது எந்த வகையில் நியாயமாகும்? இனியாவது இந்தியா தன்னைத் திருத்திக்கொள்ள முயலுமா?

இந்தியா திருந்தாவிட்டாலும் பரவாயில்லை - சில இலங்கையர் திருத்தினாலே இலங்கைக்கு விடிவு கிடைத்துவிடும். தம்மை சூழ்ந்துள்ள போரியல் கருத்துக்களை அறவே விலக்கி, பதவிகளால் தாம் பெருமை அடைவதை விடுத்து, தம்மால் அந்தப் பதவிக்களுக்கு பெருமை தேடித்தரின், இனப்பிரச்சினை தீர்வு இலகுவானதாகிவிடும். இதனை முப்படைகளின் புதிய சிரேஷ்ட அதிகாரியும், கடற்படைத் தளபதியுமான தயா சந்தகிரி நன் குணர வேண்டும்.

ஏற்கனவே சேவை நீடிப்பில், பதவியில் நிலைத்துக் கொண்டிருக்கும் தயா சந்தகிரி, தற்போது புதிய பொறுப்பை ஏற்ற கையோடு, படைகள் எதற்கும் தயாரான நிலையிலேயேயுள்ளன என அறிக்கை மீண்டும் மீண்டும் தமது கருத்துக்களால் போர்ச் சூழல் ஒன்றை தோற்றுவிப்பதிலேயே தயா சந்தகிரி போன்றவர்கள் கவனமாகவுள்ளனர்.

இவ்வாறான போக்குக் கொண்டவர்களையே, ஜனாதிபதியும் உரிய பதவிகளிலே அமர்த்தி வருகிறார். பிரதிப்பாதுகாப்பு அமைச்சராகவும், தற்போது ஆட்சியிலுள்ள கூட்டணி அரசின் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ள ரத்தினசிறியின் நியமனம் தொடக்கம், இராணுவத் தளபதி சாந்தகொட்டே கொட, பொலிஸ்மா அதிபர் இந்திரடி சில்வா வரை இன்று முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரி, தயா சந்தகிரி வரை ஜனாதிபதி இதனையே செய்து வருகிறார்.

முன்னர் ஜே.வி.பியை தன்னோடு இணைத்துக் கொண்ட சந்திரிகா, தற்போது இனவாதிகளுக்கு உயர் பதவிகளை வழங்குவதன் மூலம், தனது காய்களை நகர்த்திக்கொண்டு வருகிறார். இந்தப் பதவிகளுக்கு வருபவர்களும் தமது எஜமானி விசுவாசத்தை காட்டுவதற்காக அடிக்கடி எச்சரிக்கைப் பாணியிலான கருத்துக்களை வெளியிட்டு வருவதுடன், சிலர் செயலிலும் அதனை நடைமுறைப் படுத்துகின்றனர். ஆனாலும், சர்வதேசத்தினுடைய காதிலே பூச்சுத்த வேண்டுமென்பதற்காக, அவ்வப்போது சமாதானம் மூலமான தீர்வே நாட்டுக்கு தேவையெனவும், பேசி வருகின்றனர். இந்த இரட்டைப் பாதைகளை வைத்துக் கொண்டு புதிய அரசு எதனை சாதிக்கப் போகிறதோ தெரியவில்லை?

ஆனால் ஒன்று மட்டும் உண்மை. அதாவது சர்வதேசம் இப்போது உண்மையைப் புரிந்துகொள்ள ஆரம்பித்துவிட்டது. அரசின் கபடதாரித்தனத்தையும், சமாதானப்பாதை தவறான வழியிலே நகர்ந்து செல்வதையும், அவை அவ்வப்போது சுட்டிக்காட்டியவண்ணமுள்ளன. ஆனால், அரசோ இதனைக் கண்டும் காணாமலுள்ளது. சர்வதேச நிதியுதவி எனும் பெயரிலான அன்பளிப்பைப்பெற்றுக் கொள் வதில் அக்கறை காட்டும் அரசு அந்த நிதியுதவியை வழங்கும் நாடுகள் சில, கொடுக்கும் அழுத்தங்களை புத்திசாலித்தனமாக தட்டி வருகிறது.

அதுமட்டுமன்றி இலங்கையிலுள்ள சில அறப்படித்தவர்களை வைத்துக்கொண்டு அந்த அரசுகளுக்கு வித்தியாசமானதொரு கதையையும் விடுகிறது. இவ்வாறானதொன்றே அண்மையில் நடைபெற்ற தேசிய பல்கலைக்கழக பேராசிரியர்களின் சங்கம நிகழ்வாகும். இங்கு உரையாற்றிய பலரும், தாம் படித்தவர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் என்பதை மறந்து இடைக்கால நிர்வாக தீர்வுக்கு எதிராகவும், புலிகளுக்கு எதிராகவும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மேசையை விட்டு ஒரு அடிதானும் அப்பால் எடுத்து வைக்காது, அரசியல் பேசும் இவர்களைப்பற்றி பேசுவது அர்த்தமற்றதேயாகும். "என்னதான் நடக்கும் நடக்கட்டுமே, இருட்டினில் நீதி மறையட்டுமே, தன்னாலே தானே தடைகள் விலகுமே! ஒரு தலை வனிருக்கிறான் வருந்தாதே"யென தமிழ் மக்கள் தமது நெஞ்சத்தை நிம்மதிப்படுத்திக் கொண்டு காத்திருக்கின்றார்கள். சிங்களத் தேசத்தின் சீக்கிரமான முடிவுக்காக இத்தனை நாள் பொறுத்து, விட்டுக்கொடுத்த அவர்கள் இனியும் இழிச்சவாயர்களாக இருக்க தயாராகவில்லை. □□□

# தலை ஒட்டிப் பிறந்த பெண் குழந்தைகள் சத்திரசிகிச்சையின் பின்னர் பிரிப்பு!



தலையொட்டிப் பிறந்த ஜேர்மன் நாட்டுக் குழந்தைகள் தனியாகப் பிரிக்கப்பட்டன. இதில் ஒரு குழந்தை இறந்துவிட்டது. மற்றொரு குழந்தை நல்ல நிலையில் உள்ளது.

ஜேர்மனியில் உள்ள லெம்கோ பகுதியைச் சேர்ந்த 13 மாத பெண் குழந்தைகள் லியா, டேபியா என்ற தலையொட்டிப்பிறந்த இந்தக் குழந்தைகளுக்கு அமெரிக்காவில் உள்ள ஜோன் ஹொப்கின்ஸ் மருத்துவமனையில் 22 மணிநேரம் சத்திரசிகிச்சை நடைபெற்றது. டொக்டர் பெஞ்சமின் கார்சன் தலைமையில் 100 பேர்கொண்ட குழுவினர் இந்தச் சத்திரசிகிச்சையைச் செய்து குழந்தைகளைத் தனியாகப் பிரித்தனர்.

மிகவும் கடினமான இந்தச் சத்திரசிகிச்சையில் டேபியா என்ற பெண் குழந்தை இறந்துவிட்டது. ஆனால், லியா என்ற குழந்தை நல்ல நிலையில் உள்ளது. சிகிச்சையின் பின்பு லியா கண்விழித்துப் பார்ப்பதாக டொக்டர் திபேரா ஆன் தெரிவித்தார். தலையில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்ட பகுதியில் பிளாஸ்டிக் சிகிச்சை செய்யவேண்டியிருக்கிறது. லியாவின் உடல் நல்லமுறையில் தேறியபிறகு இந்தச் சிகிச்சையை மேற்கொள்ள டொக்ரர்கள் திட்டமிட்டுள்ளனர். அதிகப்படியான இரத்த இழப்பாலும், இருதயம் சரியாக வேலைசெய்யாததாலும் டேபியா இறந்துவிட்டதாக டொக்டர்கள் தெரிவித்தனர்.

# சிறையிலுள்ள சதாம் ஹுசைன் தோட்டவேலை செய்கிறார்!



சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் தினமும் தோட்ட வேலைசெய்கிறார். அவர் தினமும் படிக்க 170 புத்தகங்களுடன் சிறிய நூல் நிலையமும் அமைக கப்பட்டுள்ளது.

ஈராக்மீது படையெடுத்து சதாம் ஹுசேன் ஆட்சியை அகற்றிய அமெரிக்கப் படை - அதிபர் சதாம் ஹுசேனை சிறைப்பிடித்தது. அவரது சொந்த ஊரான திக்ரித் நகரில் உள்ள ஒரு சிறப்புச் சிறையில் அவர் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சிறையில் உள்ள 10 அடி நீளம் 10 அடி அகலம் கொண்ட அறையில்தான் சதாம் இப்போது அடைக்கப்பட்டிருக்கிறார்.

அந்த அறையைச்சுற்றி உள்ள மைதானத்தில் செடிகொடிகள் உள்ளன. அதில் சதாம் தினமும் தோட்ட வேலை செய்கிறார். புதிதாகச் செடிகளை நட்டு அவற்றுக்குத் தண்ணீர் பாய்ச்சுகிறார். தோட்ட வேலை செய்யவும், உடற்பயிற்சி செய்யவும் அவருக்கு அமெரிக்கப் படையினர் தினமும் 3 மணிநேரம் அனுமதி அளித்துள்ளனர். பிளாஸ்டிக் செருப்பு மட்டுமே அவர் அணிந்திருக்கிறார்.

அந்த அறையில் ஒரு நூல் நிலையம் ஒன்றையும் சதாம் ஹுசேன் அமைத்திருக்கிறார். அதில் 170 புத்தகங்கள் உள்ளன. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இந்தப் புத்தகங்களை அவருக்கு வழங்கி இருக்கிறது. அவ்வப்போது அமெரிக்க, ஈராக் டொக்டர்கள் சதாமின் உடல் நிலையைப் பரிசோதித்து வருகிறார்கள். அவருக்கு ஸ்கான் எடுத்துப் பார்த்ததில் புற்றுநோய் ஏற்பட்டிருப்பதற்கான அறிகுறி தென்படுவதாக டொக்டர்கள் தெரிவித்தனர். சிறுநீர் செல்லும் குழாயிலும் அடைப்பு ஏற்பட்டுள்ளது. குடல் இறக்க நோயாலும் அவர் அவதிப்படுகிறார். அவருக்கு சத்திர சிகிச்சை செய்யவேண்டும் என்று டொக்டர்கள் யோசனை கூறியுள்ளனர். ஆனால், சத்திரசிகிச்சை செய்துகொள்ள சதாம் மறுத்துவிட்டார். ரத்தப் பரிசோதனைக்கு மட்டும் அவர் அனுமதித்தார்.

# இஸ்ரேல் விமானப்படை தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் உறுப்பினர் பலி!



காஸாப்பகுதயில் நேற்றுமுன்தினம் இஸ்ரேல் விமானப்படையினர் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் காரில் பயணம்செய்துகொண்டிருந்த ஹமாஸ் அமைப்பின் உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்டவர் காலித் அபு சமியா (வயது 30) எனத் தெரிவிக்கப்படுகிறது. காஸாவின் வடபகுதியில் உள்ள நகரொன்றில் இவர் காரில பயணஞ்செய்துகொண்டிருநத வேளையில் இஸ்ரேல் விமானப் படையினர் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

கொல்லப்பட்ட ஹமாஸ் அமைபபின் உறுப்பினர் மிக முக்கியமான நபரெனவும், இவர் இஸ்லாமிய ஆயுதபாணிகளுக்கு ஏறிகணைகளை உற்பத்திசெய்து வழங்குபவரெனவும், இதன்மூலம இஸ்லாமிய ஆயுதபாணிகள் இஸ்ரேலின் குடியிருப்பு நகரான எஸ்டிறோட் பகுதியைத் தாக்குகின்றவர்களெனவும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

இஸ்ரேல் விமானப்படையினர் தமது அமைப்பின் உறுப்பினர் ஒருவரைக் கொன்றதற்குத் தாம் பதில் தாக்குதல் நடத்தப்போதாக ஹமாஸ அமைப்பினர் சூளுரைத்துள்ளனர்.

இதேவேளை பலஸ்தீனத்தின் காஸாவிலுள்ள ஜெவிஸ் குடியிருப்புப் பகுதியில் ஆயுதம் தரிக்காத இளைஞர் ஒருவரை இஸ்ரேல் படையினர் சுட்டுக்கொன்றனர். பின்னர் இவரது உடல் காஸாவிலுள்ள வைத்தியசாலையில் இஸ்ரேல் இராணுவத்தால் ஒப்படைக்கப்பட்டது.

குறித்த நபர் இஸ்ரேல் படையினரின் காவலரண் பகுதியை நோக்கித் தவழ்ந்துவருகையிலேயே இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக இஸ்ரேல் இராணுவத்தின் பெண் பேச்சாளர் தெரிவித்தார்.

இதனிடையே நேற்று பலஸ்தீன ஆயுதபாணிகள் இஸ்ரேலின் குடியிருப்பு நகரான எஸ்டிறோட் பகுதமீது றொக்கட் தாக்குதலை மேறகொண்ட போதும் எவ்வித சேதமும் ஏற்படவில்லை.




# சீன இராணுவ தளபதி ஜியாங் பதவியை ராஜினாமா செய்தார்

சீனாவின் இராணுவத் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார். ஜியாங் ஜெமின். இதையடுத்து சீன அதிபர் ஹுஜின்டாவோவிடம் இராணுவ தலைவர் பதவி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சீனாவில் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் நான்கு நாள் மாநாடு நேற்றுமுன்தினம் முடிவடைந்தது. இராணுவத் தலைவராகப் பொறுப்பு வகித்துவந்த முன்னாள் அதிபர் ஜியாங் ஜெமின் தன்னுடைய பதவியை நேற்று ராஜினாமா செய்ததாக கூறப்படுகிறது.

எதிர்வரும் 2007 ஆம் ஆண்டு வரை ஜியாங் ஜெமினுக்கு பதவிக் காலம் இருந்தது. ஆனால், அவர் திடீரென இந்தப் பதவியை ராஜினாமாச் செய்ததால் அதிபர் ஹுஜினடாவோ இந்தப் பொறுப்பைக் கூடுதலாக வகிக்கவுள்ளார். இதற்கு கட்சியும் ஒப்புதல் அளித்துள்ளது.

சீன இராணுவத்தில் 25 இலட்சம் பேர் உள்ளனர். ஜியாங் ஜெமினுக்கு 78 வயதாகிவிட்டது எனவே, இளம் வயதுள்ளவர்களை ராணுவத் தலைவர் பதவிக்கு நியமிக்க ஏற்கனவே கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வற்புறுத்தப்பட்டு வந்தது. இதைத் தொடர்ந்து 61 வயதான ஹுஜிண்டாவோவிடம் இந்தப் பதவி ஒப்படைக்கப்பட்டுள்ளது. சீன ராணுவத் துணைத்தலைவர் பதவிக்கு நான்கு பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# மாகாண மட்ட தமிழ் மொழித்தினம் - 2004 போட்டி முடிவுகள்

| போட்டியாளர் பெயர் | பாடசாலை |
| --- | --- |
| **பாவோதல் 1** | |
| 1 சூ.கோபிகிருஷ்ணா | கிளி.தர்மபுரம் இல1 அ.த.க.பாடசாலை |
| 2 எஸ்.சப்தான் | கமு. அல்-மனார் மத்திய கல்லூரி |
| 3 வி.சர்மியா | தி ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி |
| **பாவோதல் 2** | |
| 1 த.தர்ஷாந்த் | தி புனித சூசையப்பர் கல்லூரி |
| 2 கா.சர்மிளா | யா வட்டு மத்திய கல்லூரி |
| 3 சி.அர்ச்சனா | மட் வின்சன்ட் மகளிர் உயர்தரப் பாடசாலை |
| **பாவோதல் 3** | |
| 1 ச.சதுர்த்திகா | மட் வின்சன்ட் மகளிர் உயர்தரப் பாடசாலை |
| 2 ம.ஜெயசண்யா | தி உவர்மலை விவேகானந்தா கல்லூரி |
| 2 தி.சேந்தன் | யாழ்ப்பாணக் கல்லூரி |
| **பாவோதல் 4** | |
| 1 எஸ்.ஐ.ஸகரதுல் விஜினா | கமு அல் மஸ்ஹர் உயர்தர பாடசாலை |
| 2 ஜெ.வைஷ்ணவி | யாழ்.மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை |
| 2 எ.தர்மினி | மட் வின்சன்ட் மகளிர் உயர்தரப் பாடசாலை |
| **பாவோதல் 5** | |
| 1 ச.ஜெயந்திரன் | மு.யோகபுரம் மகா வித்தியாலயம் |
| 2 ச.மதிவதனா | மட் மகாஜனா கல்லூரி |
| 3 எச்.டயாசினி | கமு அல்மனார் மத்திய கல்லூரி |
| **இசையும் அசைவும் 1** | |
| 1 கு.நாரணி | மட் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம் |
| 2 செ.கஜந்தினி | வ கோவில் குஞ்சுக்குளம் அ.த.க.பா |
| 3 ச.நிவாசினி | மு யோகபுரம் மகா வித்தியாலயம் |
| **இசை தனி 2** | |
| 1 இ.மாதங்கி | யா இணுவில் இந்துக் கல்லூரி |
| 2 கு.பிரியங்கா | மு தண்ணீரூற்று இ.த.க. |
| 3 பா.அன்பரசி | கிளி முருகானந்தா மகா வித்தியாலயம் |
| **இசை தனி 3** | |
| 1 மா.ஷயுக்ஷனி | தி ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி |
| 2 யோ.தனப்பிரியா | யா சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. |
| 3 ஏ.ஆர்.சிப்ராஸ் | கமு அஸ் - ஸிராஜ் மகா வித்தியாலயம் |
| 3 க.வர்ஜிகன் | மு கலைமகள் மகா வித்தியாலயம் |
| 3 க.தனுஷியா | மட் புனித சிசிலியா பெண்கள் மகா வித்தியாலயம் |
| **இசை தனி 4** | |
| 1 ஜெ.குலேந்திரன் | யா யூனியன் கல்லூரி |
| 2 ர.ஐஸ்வர்யா | தி ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி |
| 3 த.நிருஷ்கா | மட் புனித சிசலியா பெண்கள் மகா வித்தியாலயம் |
| **இசை தனி 5** | |
| 1 வி.ஜீவிகா | யா யூனியன் கல்லூரி |
| 2 க.ஜெயரூபன் | வ விபுலானந்தா மகா வித்தியாலயம் |
| 3 ஸ்ரீ.சிவஞ்சினி | தி ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி |
| **இசை குழு 1** | |
| 1 யாழ்ப்பாணம் | யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை |
| 2 திருகோணமலை | தி மெதடிஸ்த பெண்கள் கல்லூரி |
| 3 மட்டக்களப்பு | மட் புனித சிசிலியா பெண்கள் மகா வித்தியாலயம் |

| போட்டியாளர் பெயர் | பாடசாலை |
| --- | --- |
| **இசை குழு 2** | |
| 1 மட்டக்களப்பு | மட் புனித சிசிலியா பெண்கள் மகா வித்தியாலயம் |
| 2 யாழ்ப்பாணம் | யா சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| 3 திருகோணமலை | தி சென் மேரிஸ் கல்லூரி |
| **தனி நடனம் 1** | |
| 1 த.சரண்யா | யா இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை |
| 2 இ.பத்மஜா | வ வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் |
| 3 பு.சிந்துஜா | மன் சித்திவிநாயகர் இந்து கல்லூரி |
| **தனி நடனம் 2** | |
| 1 கோ.ஹம்சானந்தி | வ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் |
| 2 த.ஜனாஞ்ஜனி | மு.புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம் |
| 3 பொ.றெயுமி ஜீவனந்தி | மட் வின்சன்ட் மகளிர் உயர்தரப் பாடசாலை |
| **தனி நடனம் 3** | |
| 1 கி.துவாரகா | மட் புனித சிசிலியா பெண்கள் ம.வி. |
| 2 அ.மதுஞ்சலா | வ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் |
| 3 பொ.றீற்றா நிரோசா | மன் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி |
| **தனி நடனம் 4** | |
| 1 பா.அனுஜன் | யா பெரியபுலம் மகா வித்தியாலயம் |
| 2 த.மோகனப்பிரியன் | மட் புனித மிக்கேல் கல்லூரி |
| 3 இ.ஹிந்துஜா | வ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் |
| **தனி நடனம் 5** | |
| 1 ம.யுமைரூபி | வவுனியா இறம்பைக்குளம் மத்திய ம.வி. |
| 2 ஆ.ஜீவிதா | யா இராமநாதன் கல்லூரி |
| 3 இ.நிவேதனா | மட் புனித சிசிலியா பெண்கள் ம.வி. |
| **தனி குழு 1** | |
| 1 மன்னார் | மன் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி |
| 2 யாழ்ப்பாணம் | யா இராமநாதன் கல்லூரி |
| 3 முல்லைத்தீவு | மு உடையார்கட்டு ம.வி. |
| **நாட்டிய நாடகம் குழு 2** | |
| 1 யாழ்ப்பாணம் | யா இந்து மகளிர் கல்லூரி |
| 2 வவுனியா | இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் |
| 3 மன்னார் | புனித சவேரியார் பெண்கள் கல்லூரி |
| **நாடகம் (திறந்த போட்டி)** | |
| 1 யாழ்ப்பாணம் | யா ஸ்கந்தவரோதயா கல்லூரி |
| 2 கிளிநொச்சி | கிளிநொச்சி மகா வித்தியாலயம் |
| 3 முல்லைத்தீவு | மு புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம் |
| **வில்லுப்பாட்டு (திறந்தபோட்டி)** | |
| 1 யாழ்ப்பாணம் | யா யாழ்ப்பாணக் கல்லூரி |
| 2 மட்டக்களப்பு | மட் தேற்றாத்தீவு மகா வித்தியாலயம் |
| 3 முல்லைத்தீவு | மு முல்லைத்தீவு மகா வித்தியாலயம் |
| 3 மன்னார் | மன் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி |
| **விவாதம் (திறந்தபோட்டி)** | |
| 1 கல்முனை | அல் மனார் மத்திய கல்லூரி |
| 2 திருகோணமலை | ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி |
| 3 யாழ்ப்பாணம் | யா. யாழ்ப்பாணக் கல்லூரி |

(04, 10) (நாளை தொடரும்)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மருத்துவ பீடாதிபதி - ஊழியர்கள் பரீட்சை விவகாரத்தால் முறுகல்!

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் இறுதியாண்டுப் பரீட்சைகளை வெளியாட்களைக் கொண்டு நடத்தி முடித்துள்ளதால் ஊழியர்களுக்கும் மருத்துவ பீடாதிபதிக்குமிடையில் முரண்பாடு தோன்றியுள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த 22 நாட்களாக இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் போதனை சாரா ஊழியர்கள் தமது சம்பள முரண்பாட்டை நீக்குமாறு கோரி, வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் யாழ். பல்கலைக்கழக ஊழியர்களும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் யாழ்.பல்கலைகழகத்தின் சகல பீடங்களிலும் நடத்தப்படவேண்டிய பரீட்சைகள் பிறபோடப்பட்டுள்ளதுடன் வகுப்புக்களும் நிறுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் மருத்துவபீடத்தின் இறுதியாண்டுப் பரீட்சைகளை மருத்துவ பீடாதிபதி வெளியாட்களை பணிக்கு அமர்த்தி நடத்தி முடித்துள்ளதுடன் ஏனைய பரீட்சைகளையும் அவ்வாறு நடத்தி முடிக்கப்போவதாகத் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து நேற்று ஊழியர் சங்கத்தினர் மருத்துவ பீடாதிபதியுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளதுடன இவ்வாறான நடவடிக்கைகள் தமது ஒற்றுமையையும், கொள்கைகளையும் மதிக்காது செயற்படுதலையே வெளிக்காட்டுவதாகவும் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தால் பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்க வேண்டி வரும் எனவும் எச்சரித்துள்ளனர்.(சீ)

## கூட்டணிக்குள்....

அத்துடன் எதிர்க்கட்சிகளுடனும் பேச்சு நடத்தி அரசாங்கம் சமாதான முயற்சி தொடாபாக இருக்கும் வேற்றுமைகளைக் களைய வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்றைய சந்திப்பு குறித்து கருத்து வெளியிட்ட கனேடிய தூதுவர் வலறி ரேமன் அம்மையார் -

புலிகளுடனான சந்திப்பு மிகவும் ஆரோக்கியமாக இருந்தது. நோர்வே அரசினால் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளுக்கு கனடா உறுதியான ஆதரவை வழங்கி வருகிறது.

பேச்சு முயற்சிகள் நீண்டகாலமாக தடைப்பட்டிருப்பது குறித்தும் கனடா கவலையடைந்துள்ளது. பேச்சுக்களை விரைவில் மீள ஆரம்பிப்பது குறித்தும் தீர்வு முயற்சிகளிலான விவாத மனப்பாங்கு குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது.

பேச்சு முயற்சிகளுக்கு உறுதுணையாகவிருந்த பாதுகாப்பு நிலைவரங்களில் ஏற்படும் வீழ்ச்சி குறித்து கனடிய அரசு அதிக கரிசனை கொண்டுள்ளது. தொடரும் அரசியல் படுகொலைகளும் சமாதான முயற்சிகளை பலவீனப்படுத்தி விடும் என்றும் குறிப்பிட்டார்.

## ஜே.வி.பி.....

தமிழீழ விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபையை அடிப்படையாகக் கொண்டு சமதானப் பேச்சுக்களை இரு தரப்பினரும் விரைவாக ஆரம்பிக்க வேண்டும்.

டோக்கியோ பிரகடனத்தின் அடிப்படையில் ஒஸ்லோவில் செய்து கொண்ட உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டு இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக முன்வைக்கப்படும் யோசனைகளுக்கு ஐக்கிய தேசியக்கட்சி முழுமையான ஆதரவு வழங்கும்.

மேலும் சமாதான முயற்சிகளுக்கு எதிரான ஜே.வி.பியின் செயற்பாடு ஜனநாயக விரோதமானதாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அபிலாசைகளை.....

சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழ் காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சியில் உள்ள சமாதான செயலகத்தில் நேற்றுக் காலை 10 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

சந்திப்பின் பின்னர் - சு.ப.தமிழ்ச்செல்வன் ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்த கருத்துக்களும், கேள்விகளுக்கு அளித்த பதில்களும் பின்வருமாறு.

இந்தச் சந்திப்பில் எமது நிலைப்பாடுகளைத் தெளிவாக்கியிருக்கின்றோம். சமாதானப் பேச்சுகள் முன்னெடுக்கப்படாது இழுத்தடிப்புச் செய்யப்படுவதால் ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி நிலைமையை அவர்களுக்கு தெளிவாக்கியிருக்கின்றோம்.

விரைவில் சமாதானப் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதும் தமிழ்மக்களது அபிலாசைகளின் அடிப்படையில் அதற்கு தீர்வு காணும் நோக்கோடு இந்தப் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதிலும் எமது தலைமைப்பீடம் மிகவும் உறுதியாகவும் மிகவும தெளிவாகவும் இருக்கின்றது என்பதை அவர்களுக்கு விளக்கியிருக்கினறோம்.

அவர்களும் இந்தக் கருத்துக்கு உற்சாக மூட்டியதோடு தங்களுடைய கருத்துக்களையும் வெளிப்படுத்தினார்கள். பேச்சுவார்த்தைகளை தொடக்குவதைத் தான் சர்வதேச சமூகம் ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறது. விரைவில் பேச்சுக்கள் தொடங்கப்படவேண்டும். இங்கே ஒருதீர்வு ஏற்படவேண்டும் என்று அவர்கள் எதிர்பார்ப்போடு இருக்கிறார்கள்.

கேள்வி: விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது தொடர்பாக கனேடிய அரசு உங்களுடன் ஏதும் கதைத்ததா? அல்லது நீங்கள் ஏதாவது கேட்டுக்கொண்டீர்களா?

பதில் - தமிழீழ விடுதலைப் புலிகளின் இன்றைய நிலைப்பாடுகள் சம்பந்தமாக, சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக கனேடிய அரசு மிகுந்த எதிர்பார்ப்போடு இருப்பதாகவும் அவர்கள் ஆக்கபூர்வமான முன்னெடுப்புகளை உரிய காலத்தில் முன்னெடுப்பார்கள் என்பதையும் அவர்கள் எங்களுக்கு கூறியிருக்கின்றார்கள்.

கேள்வி - கனடாவில் நடைபெறவுள்ள பொங்கு தமிழை குழப்புவதற்கு அரச தரப்பு முயற்சி செய்து வருவதாக அறிந்தோம். அது தொடர்பாக தங்கள் கருத்து என்ன?

பதில் - எம்மைப் பொறுத்தவரையில், அரச தரப்போ அல்லது தமிழ் மக்களுடைய அபிலாசைகளுக்கும் அவர்களுடைய நிலைப்பாடுகளுக்கும் எதிரானவர்களுடைய குழப்பங்கள் அல்லது குழப்புகின்ற அந்த செயற்பாடுகளுக்கு கனடா அரசாங்கம் பணிந்துபோகுமென்று நாம் நினைக்கவில்லை.

ஏனெனில் கனடா நாடு கருத்துச் சுதந்திரத்திற்கு மதிப்பளித்து மக்களுடைய கருத்து வெளிப்பாடுகளுக்கு மதிப்பளிக்கின்ற கோட்பாடுகளைக் கொண்ட உறுதியான ஒரு ஜனநாயக அரசு என்ற வகையில் இப்படியான குழப்புகின்ற முயற்சிகள் அங்கே எடுபடும் என்று நாம் கருதவில்லை.

*கேள்வி* - வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தற்போது அபிவிருத்திப் பணிகளை கனேடிய அரசு எவ்வகையான முன்னேற்றத்தை அல்லது தங்களுடைய பங்களிப்பை வழங்கும் என்பது பற்றி ஏதும் கதைத்தீர்களா?

*பதில்* - கனேடிய அரசு மட்டுமல்ல சர்வதேச சமூகமும் தமிழர் தாயகப் பகுதியில் ஒரு தீர்வு எட்டப்படுகின்ற போது, ஒரு இயல்பு நிலை எட்டப்பட்டு பெருமளவு உதவிகளை வழங்க கனடா உட்பட சர்வதேச சமூகம் யாவும் அதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள் என்று தெரிவித்தார்.

# நோர்வே தூதரகத்துக்கு முன்பாக
# சவப்பெட்டியுடன் ஈ.பி.டி.பி. நேற்றுக்காலை ஆர்ப்பாட்டம்!



கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகம் முன்பாக ஈ.பி.டி.பி கட்சியின் உறுப்பினர்கள் பிரேதப்பெட்டியை வைத்து நேற்றுக்காலை 10 மணியளவில் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புத்தளத்தில் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஈ.பி.டி.பி கட்சியின் புத்தளம் மாவட்ட அமைப்பாளரான பவான் என்றழைக்கப்படும் தம்பித்துரை சிவகுமாரின் கொலையைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு பௌத்த பிக்குகளும், சிஹல உறுமயக் கட்சியின் உறுப்பினர்களும் ஆதரவளித்ததுடன் அதில் தாமும் கலந்து கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. முன்னதாக சிவகுமாரின் இல்லத்திலிருந்து நேற்றுமுன்தினம் இரவு எடுத்துவரப்பட்ட அவரது சடலம் கொழும்பிலுள்ள ஈ.பி.டி.பி கட்சியின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அஞ்சலி நிகழ்வில் ஈ.பி.டி.பி கட்சியின் செயலாளர் நாயகம் என்.டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி. ஆர்.எல். எவ்வைச் சேர்ந்த தி.சிறிதரன், புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், ஈரோஸ் அமைப்பின் தலைவர் சங்கர் ராஜி முதலானோர் கலந்து கொண்டனர்.

பின்னர் அவரது உடலைத் தாங்கிச் சென்ற அந்தக் கட்சியின் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டமொன்றை நோர்வேத் தூதரகத்தின் முன் நடத்தியதுடன் மகஜர் ஒன்றையும் நோர்வேத் தூதரக அதிகாரிகளிடம் கையளித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈ.பி.டி.பி உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் புலிகளே இந்தக் கொலையைப் புரிந்ததாகவும் இது குறித்து நோர்வே அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் கோசங்களை எழுப்பினர். இந்த ஆர்ப்பாட்டம் இரண்டரை மணித்தியாலங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## உயர் பாதுகாப்பு....

கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிகையில் -

இலங்கையிலுள்ள இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பாக அரசாங்கம் கொண்டிருக்கும் கொள்கைகளையும், சட்டங்களையும் மீள்பரிசீலணை செய்ய எடுக்கும் முயற்சி வரவேற்கத்தக்கது.

இந்தப் பிரச்சினை தமிழர்களின் வாழ்வில் பெரும் சிக்கலை உருவாக்கியுள்ள நிலையில் அது குறித்து தென்பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தவரான டொக்டர் மரியோ கோமஸ் ஆய்வுசெய்யப் புறப்பட்டுள்ளமையில் சில சிக்கல்கள் உள்ளதாகவே நான் கருதுகிறேன்.

வடக்கு - கிழக்கில் உள்ளவர்களுக்கே இந்தப் பாதிப்பும் அவற்றுக்கான காரணகர்த்தாக்கள் பற்றியும் அதிகம் விளங்கும்.

ஆனால், மரியோ கோமஸ் பெரும்பாலும் யாரோ கூறும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டுதான் தனது தொகுப்பை அல்லது அறிக்கையை வெளியிடுவார்.

இதற்கு ஆதரமாக அவரது முதற்கட்ட உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசங்களையும், தமிழீழ விடுதலைப் புலிகள், மக்களின் வீடுகளில் குடியிருப்பதையும் சுட்டிக்காட்டி, இருசாராரும் மக்களின் காணிகளைப் பிடித்திருப்பதாகக் கூறுகின்றார் - உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினையை நியாயப்படுத்த முற்படுகின்றார். இது தவறு!

சிங்கள இராணுவத்துக்கு எதிராகப் போராடுவதற்காகவே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார்கள். தமிழ்மக்களைக் காப்பாற்றுவதற்காக அவர்கள் தம்மைத் தியாகம் செய்தார்கள். அவ்வாறிருக்கையில், தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ்மக்களின் காணிகளில் அத்துமீறியிருக்கவேண்டிய தேவையில்லை. மக்களின் விருப்பப்படியே தமிழர்களின் வீடுகளில் அவர்கள் வசிக்கிறார்கள்.

இதுகுறித்து முறைப்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவில்லை. ஆனால், இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பில் உள்ள வீடுகள் குறித்த முறைப்பாடுகள் நீதிமன்றங்கள், மனிதஉரிமைகள் ஆணைக்குழு முதலான இடங்களில் பதியப்பட்டுள்ளன.

மக்களின் வீடுகளைக் கையளிப்போம் என்பதும் பின்னர் நம்பியார் முதலான வெளிநாட்டு ஆய்வாளர்கள் அவற்றை விட்டுக்கொடுக்க வேண்டாமென்பதும், இராணுவத் தரப்பில் அவற்றை நியாயப்படுத்திப் பேசுவதும் தவறு எனவும் அவர் தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தைச் சேர்ந்த பரமநாதன் தனது உரையில் -

எந்தவொரு அறிக்கையும், ஆணைக்குழுக்களின் சிபார்சுகளும் பயனுள்ளவையாக அமைய வேண்டும். வெறுமனே கூட்டம் கூடுவதும், அதில் கலந்துகொண்டுவிட்டு யாரும் கூறும் கருத்துக்களுக்கெல்லாம் தலையாட்டிவிட்டுச் செல்வதுமாக இல்லாது உண்மையான கருத்துக்களை வெளியிடவேண்டும். மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகிடைக்கக் கூடிய விடயங்களும் தமிழ்மக்களின் உண்மையான பிரச்சினைகள் வெளிவருவதையுமே நாம் விரும்புகிறோம் என்றார்.

இந்தக் கூட்டத்திற்கு கொழும்பு மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்த வாசுகி தேவதாஸ், யாழ். மனிதஉரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள், யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தலைமையக அதிகாரிகள், யாழ். மாவட்ட பொலிஸ் உயரதிகாரிகள், அரச அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ப)

## விபத்துக்களில்...

கண்டறியுமாறு யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்ரி.விக்னராஜா யாழ். பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, நேற்றுமுன்தினமும் அரியாலைப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் மோதியதில் பாதசாரியான அரியாலையைச் சேர்ந்த வேலாயுதபிள்ளை கனகம்மா (வயது 65) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் அரியாலை - ஆசீர்வாதப்பர் வீதியில் இந்த விபத்து இடம்பெற்றது.

அவரை மோட்டார் சைக்கிளால் மோதிய முத்துராஜா தினேஷ் என்பவரை எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.ரி. விக்னராஜா உத்தரவிட்டார். (ப)

## அடுத்த மாதம்.....

கடற்படையினரும் கடற்பகுதியில் ரோந்து நடவடிக்கையை அதிகரிப்பது, இலங்கைப் படையினருக்கு இந்தியாவில் பயிற்சி மற்றும் இதர உதவிகள் என்பன உள்ளடக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவது தொடர்பான தயாரிப்பு வேலைகள் கடந்த ஆண்டு நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வாரம் ஐந்துநாள் விஜயமாக இலங்கை வந்த இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் அருண் பிரகாஷ், இலங்கைப் படையினருக்கு சகலவித ஒத்துழைப்பும் வழங்கப்படுமென உறுதியளித்திருந்தார்.

அதன்பின்னர் கூட்டுப்படைத் தளபதியாகப் பொறுப்பேற்ற கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, இந்தியாவிடமிருந்து கப்பலொன்று கொள்வனவு செய்யப்படவுள்ளதாக தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.


# வீட்டுக் கிருத்திய அழைப்பிதழ்

கடந்த (23.08.2004) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு**

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

அவர்களின் அந்தியேட்டி, சபிண்டிகரண கிரியைகள் 22.09.2004 புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இரும்பு மதவடி, வதிரி, கரவெட்டி.

(சி3174)

இங்ஙனம் குடும்பத்தினர்.


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.09.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.